Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

صوت المسلم

Muslim Kural

මුස්ලිම් කුරල්

25 ஏப்ரல் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 22 - ஸபர் - 1424 ☆ சவடு - 09 ☆ தருகை - 10 ரூபா

# மூதூர் முற்றுகைக்குள்!

இழப்புகளின் விபரங்கள் உள்ளே...

# இன அழிப்பு, சொத்திழப்பு, அகதிகள், அச்சுறுத்தல்கள்!

## தொடரும் புலிகளின் காட்டுத்தர்பார்!
## முஸ்லிம் அரசியல் தலைமைகளிடையே நீயா? நானா? அதிகாரச் சண்டை தொடர்கிறது !!





கடந்த 31 ஆம் திகதியிலிருந்து மூதூர்ப் பிரதேச முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் புலிப் பயங்கரவாதம் முஸ்லிம்களின் இயல்பு வாழ்வை பெரிதும் பாதித்துள்ளது. மூதூர் பிரதேசத்திலிருந்து முஸ்லிம்களை அடியோடு அகற்றும் நோக்கில்; மிகவும் திட்டமிட்டு பல்வேறு வழிகளில் நெருக்குவாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

மூதூர்ப் பிரதேச முஸ்லிம்கள் மீது புலிகள் இழைத்து வரும் மனித உரிமை மீறல்களை, கணிசமான தமிழ் செய்தி ஊடகங்கள் உலகின் முன் மூடி மறைத்து வருகின்றன. பக்கச் சார்பான செய்திகளை வழங்குவதும் உண்மையை திரிபுபடுத்துவதுமாக இத்தமிழ்ச் செய்தி ஊடகங்கள் புலிகளின் - முஸ்லிம்கள் மீதான திட்டமிட்ட அடக்குமுறைச் செயற்பாட்டிற்கு துணை போகின்றன. மூதூர் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வு இழப்புகளும் கண்ணீருமாக மாறிவிட்டிருக்கிறது.


கடந்த 3 வாரங்களுக்கு மேலாக மூதூர்ப் பிரதேசத்தில் வாழும் நமது சகோதர மக்களுக்கு என்ன நடக்கிறது? என்பது தெரியாமல் இலங்கை வாழ் முஸ்லிம்கள் திணறிக் கொண்டிருக்கின்றனர். அமைதிக் காலம் என சொல்லப்படும் இச்சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் புலிகளின் இராணுவ முற்றுகைக்குள் சிக்கி இழப்புகளை எதிர்கொள்கின்றனர். பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. உடமைகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட் டுள்ளன. முஸ்லிம் கிராமங்கள் (ஜின்னாநகர், ஆஸாத்நகர்) இனச்சுத்திகரிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளன. இந்த அவலமிகு சூழலுக்குள்ளும் நமது அரசியல் தலைமைகள் நமது மக்கள் முன் 'கையாலாகத்தனம்' கொண்டவர்களாய் ஏதோ உளறிக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க வேண்டிய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம்; தனது தார்மீக பொறுப்பிலிருந்து தொடர்ந்தும் தவறிக் கொண்டிருக்கிறது. மூதூர் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படையால் புரிந்துணர்வு ஒப்பந்த இணக்கப்பாட்டை மீற முடியாத நிலையில் அப்பிரதேச முஸ்லிம்கள் மிகப் பெரும் உயிர் அச்சுறுத்தல் நிலையை எதிர்கொள்கின்றனர். இது தொடர்கின்றது.

சொந்த மக்களின் பாதுகாப்பு, உயிர் வாழ்விற்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்த வேண்டிய முஸ்லிம் அரசியல் தலைமைகளோ அதிகாரத்திற்கான குடுமிச் சண்டையால் மக்களை திசை திருப்பப் பார்க்கின்றன. புலிகளின் மேலாதிக்கத்திலிருந்து சொந்த மக்களை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான அரசியல் நிலைப்பாடுகளை முஸ்லிம் அரசியல் தலைமைகள் இதுவரை மேற்கொள்ளவில்லை என்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். "அவருடன் பேசி இருக்கிறோம். இவருடன் பேசி இருக்கிறோம். அந்த மகாநாடு நடைபெறுகிறது. இந்த சந்திப்பு நடக்கிறது" என மக்களுக்கு காரணங்கள் தொடர்ந்து சொல்லப்பட்டே வருகின்றன. முஸ்லிம்கள் மீதான கொலைக்கரம் தொடர்ந்தும் மீள மீள முஸ்லிம்களை அச்சுறுத்தி வருகிறது.

மூதூர்ப் பிரதேசத்தில் 3 வாரங்களுக்கு மேலாக நிலைகொண்டுள்ள புலிகளின் இராணுவ முற்றுகை; வடக்கு கிழக்கு முஸ்லிம்களை பெருமளவில் அச்சப்படுத்தி உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் முஸ்லிம்கள் மீதான இன அழிப்பு தொடர்ந்து நடைபெறுவதும் அதனைத் தடுப்பதற்கு உரிய பரிகாரம் காணப்படாது. "சமாளிப்பு" தனத்துடன் காலம் கடத்துவதுமான அரசியல் நிலைமை தொடர்ந்தும் முஸ்லிம்களின் இயல்பு வாழ்வின் மீதான நம்பிக்கையை சிதறடித்து வருகிறது. உடனடியாக நமது மக்களுக்கு உரிய பாதுகாப்பு உத்தரவாதமிக்க அரசியல் ஏற்பாடுகளை மேற் கொள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்! ▫

## பிரதம மந்திரி மூதூர் வரும்வரை நான் மூதூரை விட்டு நகரவேமாட்டேன்!




## சிறுபான்மைக் கட்சிகளின் உதவியின்றி அரசாங்கத்தை கவிழ்க்க முடியுமா?

எஸ்.எல்.எப்.பி, ஜே.வி.பி கட்சிகளுக்கு இடையிலான உடன்பாடு மே மாதம் இடம்பெற இருதரப்பும் உடன்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அவ் உடன்படிக்கையின் பிரதான விடயங்களாக நாட்டை பிரிக்காத அதிகாரப் பரவலாக்கல், பொருளாதார அபிவிருத்தி, தேசிய வளம், தொழிலாளர் உரிமைகள் இவற்றை அடிப்படையாக கொண்டு கைச்சாத்து நிபந்தனைகள் வரையப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவ் உடன்பாடு தொடர்பான விமர்சனங்களைப் பெறுவதற்கு இருதரப்பிலிருந்தும் குழுவொன்று உருவாக்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி , எஸ்.எல்.எப்.பி கட்சிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ள இவ்விணக்கத்துக்கு சிறுகட்சிகள் சிலவும் தமது அரசியல் உடன்பாட்டை வழங்கியுள்ளன. ஆரம்பத்தில் இவ்விரு கட்சிகளுக்குமிடையில் உடன்பாடு காணப்படுவதில் பல்வேறு இழுபறிநிலை காணப்பட்டது. தற்பொழுது உடன்பாடு உறுதியான நிலையை அடைந்து விட்டதாக தெரியவருகிறது. இவ்விரு கட்சிகளின் பிரதான நோக்கம் எதிர்வரும் தோதலில் ஒன்றாகச் சேர்ந்து போட்டியிடுவதாகும். இதுவரையில் இருதரப்பினரிடையேயும் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் பொருளாதாரம், தனியார் மயப்படுத்தல் தொடர்பாக இருதரப்பினரும் பூரண உடன்பாட்டுக்கு வந்துள்ளனர். இருதரப்பினர் இணைவால் எதிர்வரும் தேர்தலில் இலங்கை பூராகவும் உள்ள பல மாவட்டங்களில் தோதல் வெற்றியினை பெறலாம் என நம்புகின்றனர்.

தற்பொழுது இரு தரப்பும் பாராளுமன்றத்தில் பெற்றுள்ள ஆசனங்களை மையமாக வைத்து நோக்கும் போது இரு தரப்பினரதும் இணைவால் வெற்றி கிட்ட முடியும். என்றாலும், பாராளுமன்றத்தில் இருதரப்பினதும் இணைவின் மூலம் தேசிய ஐக்கிய முன்னணியை தோற்கடிக்க முடியாத இன்றைய நிலைக்கு பிரதான காரணம் பாராளுமன்றத்தில் உள்ள சிறுபான்மை கட்சிகளாகும். இக்கட்சிகளின் ஆதரவு எந்தப் பக்கம் சார்கிறதோ அதனை வைத்தே பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறமுடியும்.

இந்நிலைமைக்கு அமைவாக இப்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை ஜனாதிபதி தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

## எம் சகோதரி பாத்திமாவுக்கு நேர்ந்தது என்ன?



20 வயது பூர்த்தியான பாத்திமா குருணாகல் - "தெலியாகொல்ல" என்ற பகுதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர். 9 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில் பாத்திமா ஆறாமவள். தந்தை திடீரென மரணமாகி விட்டார். அதனால் குடும்பம் பெரும் பொருளாதார பிரச்சினைகளுக்கு உட்பட்டது. குடும்பத்தை வழிநடாத்த வேண்டிய மூத்த சகோதரர் திருமணமாகி வேறாக சென்றிருந்தபடியால் குடும்பத்தில் தாயும் மகளுமாக தனித்திருந்தனர்.

தொடர்ந்த பொருளாதாரக் கஷ்டம் காரணமாகவும் தனது எதிர்காலம் குறித்தும் அவ் வேளை அவளால் மேற்கொள்ள முடியுமான ஒரே தீர்மானமாக வெளிநாடு செல்வதனையே கருதினாள். இலங்கையில் ஏதாவது தொழில் செய்து சிறுவருமானம் பெறுவதைவிட சில வருட வெளிநாட்டுப் பயணத்தின் மூலம் தனது எதிர்காலத்துக்கான சகல வசதி வாய்ப்புக்களையும் சம்பாதித்துக் கொள் ளலாம் என்ற நோக்கத்துடன் அவள் வெளிநாடு சென்றாள். பாத்திமா சவூதி சென்ற ஒரு மாதத்தின் பின்னர் அவள் தொடர்பான தகவல் களைப் பெற சென்ற சகோதரன்.....

→6

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள் ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 2004 இல் தேசிய மீலாத் விழா திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற வேண்டும்

முல்லாவின் பார்வை பகுதியில் இடம்பெறும் விடயங்கள் அனைத்தும் வரவேற்கத்தக்கன. முஸ்லிம் பிரதேசவாரியான முல்லாவின் பார்வையும் அங்கெல்லாம் பாரா முகமாக இருக்கும் பிரச்சினைகளை முல்லா ஆராயும் கோணமும் மெச்சத்தக்கது மட்டுமன்றி அது காலத்தின் தேவையும் கூட.

அந்த வகையில் கொழும்பு நகர முஸ்லிம் மக்களின், குறிப்பாக கல்வி தொடர்பான பிரச்சினைகளை முல்லா தன் பார்வைக்குட்படுத்தி இருந்தார். நமது கொழும்பு வாழ் முஸ்லிம் மக்களின் கல்விப் போக்கை அறிந்து மிகவும் வருந்துகிறேன். முடிந்தவரையில் அம்மக்களின் கல்வியில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டின் 2004 இல் தேசிய மீலாத் விழாவினை கொழும்பில் கொண்டாட வேண்டும் என முல்லா ஒரு பொருத்தமான சிபார்சை வேண்டுகோளாக விடுத்திருந்தார். அந்த வகையில் கொழும்பில் ஒரு தேசிய மீலாத் விழா நடைபெற வேண்டும் என்பதை மனதார வரவேற்கிறேன்.

அதே நேரம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் மாவட்டங்களில் திருகோணமலை மாவட்டமும் ஒன்றாகும். கடந்த காலங்களில் நடைபெற்ற வன்முறைகளால் திருகோணமலையின் முஸ்லிம் கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்களை விருத்தி செய்ய 2003 ஆம் ஆண்டில் தேசிய மீலாத் விழா மூதூர், கிண்ணியா, தோப்பூர் முதலான திருகோணமலைக் கிராமங்களில் நடைபெற வேண்டும் என பத்திரிகைகளின் மூலமும் அமைச்சர் ரவூ·ப் ஹக்கீம் மூதூருக்கு விஜயம் செய்த போதும் வேண்டுகோள் விடுக்கப்பட்டன. எனவே, 2003 இல் மூதூரில் தேசிய மீலாத் விழா இடம்பெறும் என மக்கள் எதிர்பார்த்திருந்த வேளையில் 2002 இல் நடைபெற்ற மீலாத் விழா இறுதி நாள் வைபவத்தில் மடவளையில் "2003 ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா ஏறாவூரில் நடைபெறும்" என அமைச்சர் ரவூ·ப் ஹக்கீம் முன் மொழிந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவ்விழாவில் கலந்து கொண்டிருந்த திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிஜர் தெளபீக் ஏறாவூர் கிராமமும் விருத்தி செய்யப்பட வேண்டியதே! அத்தோடு 2004 ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா திருகோணமலையில் கொண்டாடப்படல் வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அன்று முதல் 2004 ற்கான தேசிய மீலாத் விழாவினை திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். ஆதலால் முல்லாவின் கருத்துக்கொப்ப கொழும்பில் தேசிய மீழாத் விழா நடைபெறுவதற்கு முன்பு 2004 இல் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற வேண்டும் என தேசிய மீழாத் விழா தொடர்பான அனைத்துத் தரப்பினருக்கும் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றேன்

ஏ.எஸ்.எம்.அப்துல்லா,
மூதூர்.

## மருத்துவ அதிகாரியின்றி அவதியுறும் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை

பல வருட காலமாக ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியாக டொக்டர் சுகுமார் கடமையாற்றி வந்தார். கடந்த சில மாதங்களாக செங்கலடி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார். ஆனால், அவருக்குப் பதிலாக இன்னுமொருவர் நியமிக்கப்படும் வரை அல்லது வேறு ஒருவர் இடமாற்றம் பெற்று வரும் வரை அவருக்கான இடமாற்றம் மறுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை ஓட்டமாவடி வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியாகப் பணிபுரியும் டொக்டர் எம்.எச்.எம். தாரிக் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று வருவதற்கு சம்மதம் தெரிவித்து விண்ணப்பித்திருந்த போதிலும் இதுவரைக்கும் அவரது விண்ணப்பம் மறுக்கப்பட்ட நிலையில் புலிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக டொக்டர் சுகுமார் உடனடியாக செங்கலடி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்று சென்றிருக்கிறார். இதனால் நாள்தோறும் சுமார் 1000 இற்கும் அதிகமான நோயாளிகள் சிகிச்சை பெற்றுச் செல்லும் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையானது மருத்துவ அதிகாரியின்றி பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளது.

தற்போது உதவி வைத்திய அதிகாரியாக இருக்கும் டொக்டர் பஹீல் தலைமையிலேயே சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து டொக்டர் சுகுமாருக்கு பதிலாக ஓட்டமாவடியில் கடமைபுரியும் டொக்டர் எம்.எச்.எம். தாரிக் அவர்களையோ அல்லது வேறு யாரையோ நியமித்து இங்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலையைப் போக்க உதவுமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஏ.எல். மஜீத்
ஏறாவூர்

## மாளிகாவத்தை மையவாடி நில அபகரிப்புக்கு பரிபாலன சபை உடந்தையா?

கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஓரளவு செறிவாக வாழ்கின்றனர். இவர்களின் சனத் தொகைக்கு ஏற்ப விஸ்தீரமானதும், அதிகரித்த மையவாடிகளும் இல்லை. முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கென்று நான்கு மையவாடிகளே கொழும்புப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றே மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியாகும்.

இம்மையவாடி ஐநூறு வருடங்கள் பழைமை வாய்ந்தது. இத்தொன்மை ஆதாரங்களுடன் நிரூபிக்கத்தக்கது. அதுமட்டுமன்றி 1951 இல் இலங்கை அரச காணிச்சட்டப் பதிவின்படி இந்த மையவாடிக் காணியின் மொத்தப் பரப்பளவு 37 ஏக்கர் (6053 பேர்ச்சஸ்) எனப் பதிவாகியும் இருக்கிறது.

இம்மையவாடியின் பராமரிப்பு கொழும்பு பெரிய பள்ளிவாசல் பரிபாலன சபைக்குட்பட்டதாகவே இருந்து வருகின்றது. மையவாடி பராமரிப்பு குழுவில் அரசியல்வாதிகளும் அங்கத்துவம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடி நிலப்பரப்பில் அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் முயற்சிகள் நடந்தேறி வருவது கண்டு, கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் தமது பலத்த கண்டனத்தையும், தமது விசனத்தையும் காட்டி வருகின்றனர்.

இதன் எதிரொலியாகவே கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதி இம்மையவாடியின் எல்லையை குறுக்கும் வகையில் டி.பி.ஜயசிங்க நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மதிலைத் தகர்க்கும் நடவடிக்கை இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இம்மையவாடி நிலத்தினை அபகரிக்கும் ஊடுருவல் நிகழ்வதற்கு, இதன் பராமரிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்களின் மறைமுக ஆதரவு இருந்து வருகின்றதோ என்கின்ற ஒரு சந்தேகத்தையும் இப்பகுதி முஸ்லிம்கள் பகிரங்கமாக எழுப்பி வருகின்றனர்.

இவர்களின் சந்தேகத்திற்கு வலுசேர்க்கும் வகையில் ஒரு காரணத்தையும் சுட்டிக்காட்டுகின்றனர். "இம்மையவாடி தொடர்பில் ஏற்பட்ட பிணக்குகளின் போது பராமரிப்பு குழுவினரை வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டும் அதனை நிராகரித்து மௌனம் சாதித்து வருகின்றனர்." ஆகவே, இந்நில அபகரிப்பின் பின்னால் பரிபாலன சபையின் கைவரிசைப்பின்புலம் இருக்கின்றதென்றும் பரவலாக இங்கு பேசப்படுகிறது.

இம்மையவாடிப் பொறுப்பாளர்களான கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபையின் அசமந்தப் போக்குகளும், பிரச்சினைகளைக் கண்டு கொள்ளாத நடைமுறைகளும் அவர்கள் மீதான சந்தேகத்தை அகற்ற முடியாதிருப்பதோடு, உண்மைக்குச் சாதகமான நீதியினைப் பெறுவதிலும் பெரிதும் தடையாக இருந்து வருகின்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் இது விடயத்தில் இன்னும் மௌனமாக இருப்பது நியாயமற்ற செயலாகும். தனது மௌனத்தை உடனடியாக கலைத்து விட்டு, இது விடயத்தில் தலையிட்டு தனது நிலைப்பாட்டை மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்கும், நில அபகரிப்பை தடுத்து நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உடன் தயாராக வேண்டும்.

இந்நிலையினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதமாகவோ, அசிரத்தையாகவோ இருந்து விடுவார்களானால் இந்நில அபகரிப்பில் நிர்வாகத்திற்கு உடந்தையுண்டு என மக்கள் சந்தேகிப்பது உண்மையானதும், நியாயமானதும் என்ற நிலைக்கு வந்து விடும் என்பதே யதார்த்தமாகும்.

*எம்.எம்.எம்.நாசீம்,*
*மாளிகாவத்தை.*

## உண்மையின் குரலே ~ முஸ்லிம் குரல்

முஸ்லிம் குரலின் வெற்றிநடையையிட்டு பெருமிதமடைவதுடன் இறைவனுக்கு நன்றியையும், முயற்சியின் தொடர் வெற்றிக்காய் இறைவனைப் பிரார்த்திக்கவும் செய்கிறேன்.

முஸ்லிம் குரலின் விமர்சனப் போக்கை சிலரால் ஜீரணிக்க முடியா விட்டாலும் முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நிரந்தர நலன் கருதி இச்சத்திர சிகிச்சை தொடர வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

எதிலும் நடுநிலையாய் இருக்க வேண்டும் என்ற கருத்து எல்லோராலும் முன் வைக்கப்படுவதுடன் முஸ்லிம் குரலிலும் இது எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் உண்மை - பொய், சரி - பிழை, நீதி - அநீதி என்ற இரு நிலைதான் இருக்கின்றதே தவிர நடுநிலை என்ற ஒன்று இல்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். இதில் முஸ்லிம் குரலின் நிலை என்பது உண்மை, சரி, நீதி என்ற நிலையைச் சேர்ந்ததாக இருக்கும் (இருக்க வேண்டும்) என்ற அசையாத நம்பிக்கை தொடர்ந்தும் வளர்க்கப்பட வேண்டுமென வினயத்துடன் வேண்டுகிறேன்.

*எம்.எச்.எம்.இத்ரீஸ்,*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,*
*ஒலுவில்.*

## முஸ்லிம் ஊமைத் தலைவர்கள்

ஈராக் ஒரு இஸ்லாமிய நாடு.
நாகரீகத்தின் ஊற்றுக் கண். புனித
மகான்கள் பிறந்த மண். நாகரீகமற்ற
மானிடத்திற்கெதிரான அடாவடி
ஆக்கிரமிப்புக்காரர்கள், அதன்
எண்ணெய் வளத்தைக் கொள்ளை
யடிக்க தொடர்ந்து மனிதர்களைக்
கொன்று குவிக்கின்றனர். உலக
மக்களோ கொந்தளித்து எதிர்க்கூச்சல்
போடுகின்றனர். அப்போதும்
அடாவடித்தனம் அடங்கவில்லை.
தொடர்கிறது.

சவூதி, கட்டிலின் கீழ் ஒட்டிக்
கொண்டு அமெரிக்கப் படைக்கு
இடங்கொடுத்து நிற்கின்றது. குவைத்
சுச்சை வரை அமெரிக்கப் படைகளை
அள்ளி வைத்திருக்கின்றது. கட்டார்
கொட்டமடிக்க
இடங்கொடுத்திருக்கின்றது. ஆனால்,
உலக மக்களில் உயர்ந்த விகிதம்
கொந்தளித்துக் கூக்குரலிடுகின்றது.

இலங்கையில் சவூதி, குவைத்
பணத்தில் இஸ்லாம் வளர்ப்போர்,
இதுவரை காலம் இலங்கை முஸ்லிம்கள்
தலைவர்களாய் ஓங்கிக் குரல் எழுப்பி
உயரப்பார்த்தவர்கள் ஈராக் யுத்தம் பற்றி
எதுவும் கூறவில்லை. இந்த ஊமைச்
சைத்தான்கள் எங்கே ஒளிந்து
கொண்டனர் என்பதே இன்றைய ஈராக்
யுத்தத்தை எதிர்க்கும் இலங்கைச்
சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் அதிக
விகிதமானோர் வினவும் வினா? உடனே
ஊமைகளே வெளியே வாருங்கள்!
அமெரிக்காவின் அடாவடித்தனத்தை
எதிர்த்து உங்கள் அறபு எஜமான்களுக்கு
எடுத்துக் காட்டுங்கள். உங்கள்
தலைமையின் அந்தரங்கம்
எல்லோருக்கும் இப்போதுதான் புரிகிறது
என்பதை நீங்களும் விளங்குங்கள்.

*ஏ.தாஹாபரீத், பேருவளை.*

## முதுகெலும்பில்லாத முதுகு சொறியும் ஊடகவியலாளர்களே நம்மில் அதிகம்

"முஸ்லிம் குரல்" நம் சமுதாயத்தின் குரல் என்பதை ஊர்ஜிதம் செய்து வரும் எட்டு சுவடுகளையும் படித்தவர்களில் நானும் ஒருவன். "முஸ்லிம் குரல்" 8 ஆவது சுவடில் "முஸ்லிம் ஊடகவியலாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?" என, முல்லா தன் பார்வையிலே கேட்டிருக்கிறார். உண்மையான முஸ்லிம் ஊடகவியலாளர்களை முல்லாவின் கேள்வி சிந்திக்கத் தூண்டும். ஆனால் நம் முஸ்லிம் ஊடகவியலாளர் பலருக்கு, முல்லாவின் கேள்வி ஒன்றுமே செய்யாது. ஏனெனில் நம்மில் பல ஊடகவியலாளர்கள் முதுகெலும்பில்லாதவர்களாக, முதுகுசொறியும் முனாபிக்குகளாகவே இருக்கின்றனர் என்பதுதான் யதார்த்த நிலை.

சொன்னால் வெட்கம் ஒருபக்கம், சமூகத்தின் இன்றைய துர்ப்பாக்கிய நிலையில், சொல்லாமலும் இருக்க முடியாது. இதோ....

நம் ஊடகவியலாளர்களில் பலர் கொள்கைப் பிடிப்பில்லாதவர்களாகவே இருக்கின்றனர். ஆளுங் கட்சியாக எந்தக் கட்சி வருகிறதோ, அந்தக் கட்சியின் முஸ்லிம் எம்.பிமார்களை அமைச்சர்களாக நம் ஊடகவியலாளர்களில் பலர் பிடித்துத் தொங்க ஆரம்பித்து விடுவர் "நீங்கள்தான் சமூகத்தை காக்க வந்த ஒரே அமைச்சர்" எனப் புகழ்ந்து தள்ளுவர். அவர்களின் புகைப் படங்களையும், செய்திகளையும் தாம் பணி புரியும் பேப்பரில் பிரசுரித்து நல்ல பிள்ளைகளாக ஆகிவிடுவர். பெறவேண்டிய சலுகைகளை எல்லாம் பெற்றுக் கொள்வர்.

ஆட்சி மாறி எதிரணியிலிருந்த கட்சி அரசமைத்துவிட்டால், சென்ற அரசு காலத்தில் ஏறிட்டும் பாராத முஸ்லிம் எம்பி மார்களையும் அமைச்சர்களையும் "இதே கூட்டம்" சூழ்ந்து கொள்ளும்; புகழ்ந்து தள்ளும்; புகைப்படம் செய்தி எல்லாம் பிரசுரிக்கும். பெறவேண்டியவைகளை எல்லாம் பெற்றுக் கொள்ளும். இவர்களும் கட்சி மாறி விடுவர்.

முஸ்லிம் அமைச்சர்கள் ஏதேனும் விருந்துக்கு சிலவேளை நம் முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கும் அழைப்புகள் அனுப்புவர். அப்படி விருந்துக்கு போய் வந்தபின், அமைச்சர் வீட்டு சொந்தக்காரர்போல் ஒத்து ஊத இவர்கள் ஆரம்பித்து விடுவர். முகத்துக்கு முன் புகழ்வதில் - புளுகுவதில் இவர்கள் சளைத்தவர்கள் அல்லர். சலாத்தையும் - இன்ஷா அல்லாஹ்வையும் தாராளமாகப் பாவிப்பர். ஹாஜி... ஹாஜி... என்று வார்த்தைக்கு வார்த்தை வக்காலத்து வாங்குவர்

இப்படிப்பட்டோர் அமைச்சரின் குறைகளை, அவர்கள் செய்யத் தவறியதை, செய்ய வேண்டியதை ஒருநாளும் தம் பத்திரிகையில் சுட்டிக் காட்டி எழுதவே மாட்டார்கள். போன வருடம் எழுதிய ஞாபகார்த்த கட்டுரைகளை அப்படியே "உல்டா" பண்ணி, இவ்வருடம் பிரசுரித்து, அன்னாரின் குடும்பத்தில் செல்லப் பிள்ளையாகி விடுவர். புதிய சிந்தனை - புதிய ஆராய்ச்சி - புதிய தேடல் - வாசிப்புப் பழக்கம் நம் ஊடகவியலாளர் பலருக்கு இல்லை என்பதுதான் உண்மை. இதனை முல்லா அறிவாரா?

விதிவிலக்கானோர் சிலர் நம்மிடையே இருக்கவே செய்கின்றனர். அவர்கள் தாளம் போட சபைக்கு வருவதில்லை. தாளம் போடும் பலரால் சமுதாயத்திற்கு எவ்வித நன்மையும் இல்லவே இல்லை. இது குறித்தும் முல்லா எழுத வேண்டும்.

*எம்.பீ.ரஸ்வி, சட்டத்தரணி*

## ரிஷாத் பதியுதீனின் அறிக்கைக்கு ஹரீஸ் எம்பி மறுப்பு!

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியை வீழ்த்த வேண்டிய தேவை இல்லை என்றும் தொடர்ந்தும் ஆட்சியாளர்களின் பங்காளிகளா இருந்து முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்



ஒன்றியத் தின் பெயரால் ரிஷாத் பதியுத்தின் எம்பி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கைத் தொடர்பாக நமது செய்தியாளர் ஹரீஸ் எம்பியை தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்படி அறிக்கைக்கும் தனக்கும் எந்த விதமான தொடர்பும் உடன்பாடும் இல்லையென கண்டிப்பாக மறுத்துரைத்தார். அந்த அறிக்கை எம்மை கலந்தாலோசியாது ரிஷாத் பத்தியுத்தினின் சொந்த விருப்பின் பேரிலேயே எமது பெயர்களையும் பயன்படுத்தி வெளியிடப்பட்டது கண்டிக்கப்பட வேண்டியது என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மூதூரில் எமது கண்முன்னாலேயே புலிகளால் முஸ்லிம்கள் அழிக்கப்படும் போது - அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தில் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு எமக்கு எந்தத் தேவையுமில்லை. மூதூரில் முஸ்லிம்களை பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது. ஆகவே, தொடர்ந்தும் அரசாங்கம் முஸ்லிம்களை ஏமாற்ற முடியாது. விரைவில் நாங்கள் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பாக உறுதியான அரசியல் முடிவுகளை எடுக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.



## சமாதானத்தின் கதாநாயகர்களான முஸ்லிம்களை நன்றி மறந்தது ஏன்?

தற்போதை இனப்பிரச்சினைத் தீர்வு
விடயத்தில் யார் கைகொடுத்து
உதவினார்களோ, அவர்களை எட்டி
உதைத்து செருப்பால் அடித்து
மட்டந்தட்டி, தூக்கி வீசுகின்ற ஓர்
மன்னிக்க முடியாத நிலையை
இன்றுவரை யூஎன்.பி. தனது செயலில்
காட்டிக் கொண்டிருக்கிறது.
அண்மையில் சம்மாந்துறையில் கொட்டித்
தீர்த்தார்கள். ஏன் மூதூரில் 2003.04.15
ஆம் திகதியன்று இதே யூஎன்.பியில்
இருக்கும் முஸ்லிம் எட்டப்பர்
நியாயமான முறையில் கொட்டித்
தீர்த்துள்ளார். இதுவெல்லாம் பி.ஏ.
ஆட்சியை விட மிக மிக அதிகம்.
ஏனெனில் இலங்கையில் சமாதானம்
ஒன்று நிகழுமாயின் அதற்கு முதல் உரம்
இட்டவர்கள் என்றால் அது
முஸ்லிம்கள்தான் (எஸ்.எல்.எம்.சி.). பி.ஏ.
யை விட்டு மாவனல்லை பிரச்சினையை
தற்போதைய தலைவர் தூக்கிப் பிடித்து
வெளியேறாவிட்டால் நினைத்துக்
கூடப்பார்க்கவும் முடியுமா? இந்த
முதலாளித்துவ கட்சி யூஎன்.பி. ஆட்சி
பீடம் ஏறியிருக்குமா? குறிப்பிட்ட
இயக்கத்தின் அங்கத்தவர்கள் நம்மை
நன்றி மறந்து அவர்கள் எறிய இருக்கும்
எலும்புத் துண்டுகளை பொறுக்க
வேண்டுமென்று அறிக்கை விட
முடியுமா? ஏன் மறந்தார்கள். அப்படி
மறந்த நன்றி கெட்ட இந்த
கையாலாகதவர்களோடு பாராட்டியும்
சேர்ந்தும் இருக்கின்ற நம் கட்சியின்
தலைமைத்துவம் இதுவரை
உருப்படியான ஆக்கபூர்வமான
கோரிக்கைகளை இவர்களிடம் கேளாமல்
இருப்பதுதான் உள்ளத்தை அழச்
சொல்கிறது. நமது முஸ்லிம்களின்
எதிர்காலம் மிகவும் ஓர் பயங்கரமான
காலகட்டத்தில் இருக்கின்ற
சந்தர்ப்பத்தில்தான் அதனை நாட்டில்
மட்டுமல்லாது வெளியுலகுக்கும் வெளிக்
கொணரச் செய்ய வந்ததுதான் முஸ்லிம்
குரல். நன்றி எப்படிக் கூறுவது என்றே
தெரியாமல் உள்ளது.

ஆக, சமாதானத்தின் கதாநாயகர்கள்
அது முஸ்லிம்கள் மாத்திரம் தான்
என்பதை அரசும், புலிகளும் உணர்ந்து
உடன் துரித நடவடிக்கையில் ஈடுபட
வேண்டும் என்பதும், இல்லாவிடின்
சமாதானம் தோற்றுப் போவதில் முதல்
பாவகாரமானவர்கள் நீங்கள் தான்
என்பதையும் ஒருநாள் உணர்வீர்கள்.

"நல்லதை சிந்தியுங்கள், தீயதை
விட்டு விடுங்கள்"

*றிபாய் எம்.சும்சுதீன், நிந்தவூர்.*

## குப்பைகள் நிரம்பி வழியும் சாய்ந்தமருது கடல் பகுதி

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு அருகில் உள்ள கடலில் குப்பையை போட்டு குப்பை மேடாக வைத்துள்ளார்கள் அதனால் அதில் இருந்துவரும் துர்நாற்ற வாடை சுடற்காற்றை சுவாசிக்க வரும் மக்களுக்கு இடைஞ்சலாக அமைந்துள்ளது. சூழல் பல வழிகளிலும் மாசடைந்து வருகிறது. இதைப் பற்றி சுகாதார பணிப்பாளர்களுக்கு அறிவித்தும் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை. தயவு செய்து இது தொடர்பான நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*கே.எல்.ஹிலிமி,*
*சாய்ந்தமருது.*

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது
மக்களுக்குள்
கருத்துக்களை பரிமாறிக்
கொள்வதற்கும்
விவாதங்களைத் தொடங்கவும்,
தொடரவும் தயாராகவுள்ளோம்!
உங்கள் கருத்துக்களை
சுருக்கமாக எமக்கு எழுதி
அனுப்புங்கள்!

## சொல்ல வேண்டிய சேதி...

நிழல் தருமென நம்பிய
விடில் தருவொன்று
திட விழுதுகள் பரப்பி
அடைத்து முள் விதைத்து
உதைத்து மார்பில்
உரத்து முழங்கியது
இந்தப் பூமி எனக்கே
இந்தப் பூமி எனக்கே

ஈழப்படையொடு பொருதி
ஆளுந் திறனற்ற வேழப்
பெரும்படை ஒன்று
சூழ இனப் பூமி வெறி பிடித்து
ஆதிக்கம் சாதிக்க
ஆர்த்து மோதிப் பிளிறின
இந்தப் பூமி எனக்கே
இந்தப் பூமி எனக்கே

குருதித் தாக மடங்கா கடுவன்
கொடுப் புலி, பூரான், ஓநாய்
குள்ள நரிகள், கும்பிடு தட்டான்
எல்லாம் சேர்ந் தெதிர்த்து
கடித்துக் குதறிக் கதறின
இந்தப் பூமி எனக்கே
இந்தப் பூமி எனக்கே

பொறுத்துப் பார்த்த பூமி
பொங்கிச் சீறியது
ஊழித் தீயாற்றில்
ஊதித் தீய்த்தது

இராட்சத விருட்சம் - ஒரு
அட்சர மற்றுப் பொசுங்க
வேழப் படை சிதறி
ஆழப் புதைந் தழிய
அத்தனை தீச் சந்துக்களும்
தீச் சந்துக்கில் தீய
இந்தப் பூமி எனக்கே
இந்தப் பூமி எனக்கே

புதுப் பூமி கிடைத்தது - நமக்கென
புதுப் பூமி கிடைத்தது.
புதுக்க விதைப்போம்
புதுப் பயிர் வளர்ப்போம்.

*என்.ஏ.தீரன்.*

## முஸ்லிம் குரல் காலத்தின் தேவையே!

முஸ்லிம் குரல் பத்திரிகையைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். காலத்தின் தேவையறிந்து தங்களால் வெளியிடப்படும் இப்பத்திரிகை முஸ்லிம் சமூகத்திற்காக குரல் கொடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முஸ்லிம் குரல் பத்திரிகையை புத்தளம் பகுதியிலும் மக்கள் மயப்படுத்த வேண்டியுள்ளது. மிகவும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பத்திரிகையே தங்களால் அனுப்பப்பட்டு வருகிறது. அவற்றை விரும்பிப் படிப்பவர்கள் பலர் உள்ளனர். இப்பத்திரிகையை மேலும் மக்கள் வாங்கிப் படிக்க வேண்டும் என்பது எனது பேரவா. இந்தப் பணியை என்னால் செய்துதர முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

-எஸ்.ஆர்.எம்.முஹ்சி,
*நியூ செட்ல்மென் வீதி, புத்தளம்.*

## சீதனம் பற்றிய கிண்டல்

### *வரதட்சணை வாங்காதீர்கள்*

இப்போதெல்லாம் மனிதர்கள் சந்திக்கிறார்கள். ஆனால், மனங்கள் சந்திப்பதே இல்லை. அதனால்தான் பிரச்சினைகள் பெரிதாகிக் கொண்டே வருகின்றன.

மற்றவை ஒருபுறம் இருக்கட்டும். இல்லற வாழ்க்கையில் இணையப் போகும் இரண்டு மனங்களாவது சந்திக்க வேண்டாமா?

அங்கு மனம் சந்திப்பதற்குப் பதிலாக பணம் மட்டுமே சந்திப்பதைப் பார்க்கிறோம். திருமணப் பேச்சு தொடங்கிய உடனே நகை, ரொக்கம், சீர்வரிசை பற்றிய பேச்சுத்தான் தலைதூக்கி நிற்கிறது.

### மாப்பிள்ளை. வீட்டார்!

ஒரு பெண்ணுக்கு நூறு பவுன் நகை போடுவதாகப் பேசி முடிக்கப்பட்டு விட்டது. மாப்பிள்ளையின் தந்தைக்கு அவை எப்படிப்பட்ட நகைகளாக இருக்கும் என்று அறிய ஆவல். பெண்ணின் தந்தையைப் பார்த்து, "உங்கள் பெண்ணுக்கு கழுத்தில் என்ன போடுவீர்கள்? காதில் என்ன போடுவீர்கள்? என்று கேட்டுக் கொண்டே வந்தார். அதெற்கெல்லாம் பதில் சொன்ன பெண்ணின் தந்தை "நீங்கள் என்ன போடுவீர்கள்?" என்று திருப்பிக் கேட்டார். அதற்கு மாப்பிள்ளையின் தந்தை என்ன சொன்னார் தெரியுமா?

"பேசியபடி நகையெல்லாம் சரியாக இருக்கிறதா என்று எடை போடுவோம்! சரியாக இல்லாவிட்டால் சண்டை போடுவோம்!"

ஆக, மாப்பிள்ளை வீட்டார் போடுவது, அதுதான்!

மண வாழ்க்கையில் இப்படி பணம் ஊடாடுவது இயற்கைக்கு முரணானது அல்லவா? அதனால்தான்,

"பூக்களின்
கன்னங்களில் கூட
இப்போது
கண்ணீர்!
காரணம்
வண்டுகளும்
வரதட்சணை
கேட்கின்றனவாம்"
என்று ஒரு கவிஞன் பாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தரப்பு

என்பது, நமது அரசியல் அரங்கில் ஒரு முதன்மையான அரசியல் கோரிக்கையாக நிலைபெற்று விட்டது. கடந்த ஒரு வருடமாக நீடித்துக் கொண்டிருக்கின்ற அரசியல் பேச்சுவார்த்தைச் சூழலின் ஆரம்பத்திலேயே, பேச்சுவார்த்தையில் நமது மக்களின் சார்பில் கலந்து கொள்வதற்குச் சமத்துவமான தனிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழத் தொடங்கிவிட்டது.

தனித்தரப்பு என்ற இந்தக் கோரிக்கை இந்த ஒரு வருடமாக நமது மக்களின் அரசியல் இயக்கத்தில் எத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது என்பதை புலப்படுத்தியிருக்கின்ற சில நிகழ்வுகளை முதலில் தொட்டுச் செல்வது நல்லது.

1. அரசியல் பேச்சுவார்த்தைகளில் நமது மக்களின் சார்பில் நமது பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வதை புலிகள் இயக்கம் ஆதரிப்பதாக முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பு முஸ்லிம் கொங்கிரஸ் தலைமை புளகாங்கிதத்துடன் கூறி வந்தது.

2. பின்னர் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைக்காக முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அரசாங்கத்தின் சார்பில் பங்கேற்றபோது, தான் முஸ்லிம் கொங்கிரஸ் தலைவராகவும், முஸ்லிம்களின் பிரதிநிதியாகவுமே கலந்துகொள்வதாக அவர் மிகவும் உறுதிபடக் கூறினார். பேச்சுவார்த்தைகளின்போது வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களை தொடர்ச்சியாக முன்வைக்கவிருப்பதாக அவர் ஆணித்தரமாகக் கூறினார்.

3. பேச்சுவார்த்தைகளின் இரண்டாம், மூன்றாம் சுற்றுக்கள் முடிவடைந்த போதும் முஸ்லிம்கள் தொடர்பான எந்த விடயங்களும் கவனத்திற்கு எடுக்கப்படாத நிலையில் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று எழுந்த போது, அவற்றை உரிய நேரத்தில முன்வைக்க இருப்பதாக முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

4. நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது மு.கொ. தலைமைக்குள் முரண்பாடுகள் தோன்றி, அவர்களில் ஒரு பிரிவினர் பாராளுமன்றப் பகிஸ்கரிப்பில் ஈடுபடத் தொடங்கினர். இந்தப் பகிஸ்கரிப்பிற்கான காரணங்களில் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் சார்பில் தனித்தரப்பாகக் கலந்துகொள்வதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாக இருந்தது.

5. ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது மு.கொ. உடைந்தது. இந்த உடைவுக்கு தனித்தரப்பு என்ற கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பது ஒரு முக்கிய காரணமாகச் சொல்லப்பட்டது.

6. இந்த நிகழ்வுகளுக்கிடையே நமது மக்கள் பலவேறு சந்தர்ப்பங்களில் வெகுஜன எழுச்சிகளின ஊடாக தனித்தரப்பு என்ற கோரிக்கையை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளார்கள். இதன் உச்ச வெளிப்பாடாக, நமது மக்களினால் முன்மொழியப்பட்ட ஒலுவில் தேசப் பிரகடனத்தில் தனித்தரப்பு என்பது ஒரு முக்கிய அரசியல் கோரிக்கையாக நிரற்படுத்தப்பட்டது.

7. இறுதியாக, புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித் தரப்பாக கலந்துகொள்வதை புலிகள் எதிர்ப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டார்.

இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. தனித்தரப்பு என்ற நமது கோரிக்கை சக்திமிக்க ஒரு மந்திரக் கோல் போன்று நமது அரசியல் தளத்தை ஆட்டுவிப்பதை உணரமுடிகின்றது. நமது அரசியல் தலைமைகளுக்கு மட்டுமன்றி அரசாங்கம் மற்றும் புலிகள் அமைப்பிற்கும் இது ஒரு தாக்கத்திற்குரிய அரசியல் கோரிக்கையாக இப்போது மாறிவிட்டது.

எனவே, இத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்ற இவ் விடயம் தொடர்பாக நாம் இன் னும் தெளிவான புரிதல்களையும், உணர்வுகளையும் கொண்டிருப்பது அவசியமாகின்றது. இந்தக் கோரிக்கையானது எவ்வாறு நமது மக்களின் தேசிய உரிமைகளின் அரசியல் குறியீடாக அமைகின்றது என்பதையும் தனித்தரப்பாகப் பங்கேற்பது சர்வதேச அரங்கில் எத்தகைய அரசியல் முக்கியத்துவத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதையும் நாம் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, வெவ்வேறு சமூகங்களுக்கு இடையேயான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்ற பேச்சவார்த்தைகளில், சம்மந்தப்பட்ட சமூகங்கள் அனைத்தும் சம அந்தஸ்த்துடன் தனித் தனித் தரப்பாகப் பங்கேற்பதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த உரிமையை மறுப்பதற்கோ, நிராகரிப்பதற்கோ யாருக்கும் உரிமை கிடையாது. இந்த வகையில் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் நமது மக்களின் சார்பில் தனித்தரப்பாகப் பங்கேற்பது என்பது மீறப்பட முடியாத நமது உரிமைகளில் ஒன்றாக இருக்கின்றது.



இரண்டாவதாக, பேச்சுவார்த்தைகளில் நாம் தனித்தரப்பாகக் கலந்தகொள்வது என்பது சமூக அளவில் நாம் தனியான சமூகமாக இருக்கின்றோம் என்பதை உத்தரவாதப்படுத்துகின்ற அரசியல் சான்றாக அமைகின்றது. ஒரு சமூகம் தனது சமூக தனித்துவத்தையும் உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டுமாயின் அரசியல் ரீதியில் அதன் தனித்துவம் அங்கீகரிக்கப்படவேண்டும. இவ்வாறான அங்கீகாரத்தை வழங்குகின்ற செயற்பாடுகளில் அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது அந்த சமூகம் தனித்தரப்பாகப் பங்கேற்பதும் ஒன்றாக விளங்குகின்றது.

மூன்றாவதாக அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது சமூகங்களின் கூட்டு உணர்வுகளும் கூட்டு அபிலாஷைகளுமே தீர்விற்கான அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு சமூகத்தின் கூட்டு உணர்வுகளையும், கூட்டு அபிலாஷைகளையும் அந்த சமூகத்தின் பிரதிநிதிகளால் மட்டுமே சிறப்பாக வெளிப்படுத்த முடியும். இவ்வகையில் அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது அந்த சமூகத்தின் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்கேற்பது கட்டாயமாகின்றது. நீண்ட காலமாகவே இந்நாட்டின் அரசியல் தளத்தில் நமது சமூகத்தின் உணர்வுகளும் அபிலாஷைகளும் உதாசீனப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் தற்போதைய அரசியல் பேச்சுவார்த்தைகளில் நமது மக்களின் சார்பில் தனித்தரப்பாகப் பங்கேற்பது உச்சநிலை அவகியமாக அமைகின்றது.

நான்காவதாக ஒரு அரசியல் பேச்சுவார்த்தையில் ஒரு சமூகம் தனித்தரப்பாக பங்கேற்கும் போது சர்வதேச அளவில் அதன் சமூக அரசியல் தனித்துவங்கள் அடையாளம் காணப்படுகின்றன. பேச்சுவார்த்தையின் ஊடாக எத்தகைய தீர்வுகள் எட்டப்படுகின்றன என்பதை விட அத்தகைய பேச்சுவார்த்தையில் ஒரு சமூகம் தனித்தரப்பாகப் பங்கேற்கின்றது என்பதே சர்வதேச அரங்கில் அதிக முக்கியத்துவம் பெறுகின்ற விடயமாக இருக்கின்றது. வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் ஒரு தனியான சமூகமாக வாழ் கின்றார்கள் என்ற உண்மை சர்வதேச அரங் கில் தொடர்ச்சியாக மறைக்கப்பட்டு வந்திருக் கின்றது இந் நிலையில் இன்றைய அரசியல் பேச்சுவார்த்தைகளில் நாம் தனித் தரப்பாகப் பங்கேற்பதானது நமது மக்களின் சமூக அரசியல் தனித்துவங்கள் சர்வதேச ரீதியாக அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் பெறுவதற்கான முக்கிய அரசியல் வழிமுறையாக இருக்கின்றது.

ஐந்தாவதாக, சிறீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான தற்போதைய பேச்சுவார்த்தையானது தெளிவான முறையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களை மையமாகக் கொண்டதாக மாறிவருகின்றது. புனர்நிர்மாணம், புனர் வாழ்வு, மீள் குடியேற்றம் போன்ற விடயங்களில் எட்டப்பட்டிருக்கின்ற முடிவுகளும், உருவாக்கப்பட்டிருக்கின்ற செயலணிகளும் வடக்கு கிழக்கு சார்ந்தே அமைந்திருக்கின்றன. இது ஒரு முக்கியமான மாற்றப் போக்காக அமைகின்றது.

ஒரு சமூகத்தின் சார்பில் தீர்வுகளை எட்டுவதும், ஒரு பிரதேசம் சார்ந்து தீர்வுகளை எட்டுவதும் முற்றிலும் வேறுபட்ட விடயங்கள். ஒரு சமூகத்தின் சார்பில் பேசுவதற்கும், தீர்வுகளை எட்டுவதற்கும் அந்த சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு முழு பாத்தியதையும் இருக்கின்றது. ஆனால் ஒரு பிரதேசம் சார்பாகப் பேசும்போதும், தீர்வுகளை எட்டும் போதும் அங்கு வாழ்கின்ற சகல சமூகங்களின் உரிமைகளும் உள்ளடக்கப்படுகின்றன. இதன்போது அங்குள்ள ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளே அந்தப் பிரதேசம் சார்பாகக் கலந்துகொள்கின்ற நிலையில் அது ஏனைய சமூகங்களின் உரிமைகளை மறுப்பதாகவும், மீறுவதாகவும் அமைகின் றது.

புலிகள் இயக்கம் வடக்கு கிழக்கு பிரதேசம் சார்ந்தே தமது கோரிக்கைகளை அதிகம் முன்வைத்து வருவதையும், பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களை தனித்தரப்பாகப் பங்கேற்க அனுமதிக்கமாட்டோம் என்று அறிவித்திருப்பதையும் ஒன்றிணைக்கும்போது அவர்கள் நமக்கு வெளிப்படுத்துகின்ற செய்தி இதுதான்: " வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் தனியானதும், சுயாதீனமானதுமான அரசியல் அதிகாரத்திற்கு உரித்துடையவர்கள் அல்ல" என்பதுதான் அந்த செய்தி.

புலிகள் இயக்கம் இந்தத் திசையிலேயே மேலும் உறுதியாக நகரவிருக்கின்றார்கள். சர்வதேச நிதி உதவியுடன் நிர்மாணப் பணிகளும், அபிவிருத்திகளும், நிர்வாகக் கட்டமைப்புகளும் உருவாக்கப்படவிருக்கின்றன. இந் நிலையில் வடக்கு கிழக்கில் தமது அதிகாரத்தை சவால்களற்ற முறையில் நிலை நாட்டுவதற்காக புலிகள் இயக்கம் அங்கு வாழ்கின்ற நமது மக்களின் அரசியல் தனித்துவத்தையும் உரிமைகளையும் மறுத்து தமது ஆதிக்கத்தின் கீழ் நமது மக்களை கட்டுப் படுத்துவதை இலக்காகக் கொண்டிருக்கின்றது. இதனால் முன்னெப்பொழுதையும் விட இனிவரும் பேச்சுவார்த்தைகளில் நாம் தனித்தரப்பாகப் பங்கேற்பதும் எமது கோரிக்கைகளையும் உரிமைகளையும் வலியுறுத்துவதும் அவசரக் கடமையாகின்றது.

இத்தகைய பின்னணியில் தற்போதைய பேச்சுவார்தைகளில் நமது தனித்தரப்பு பிரதிநிதித்துவதிற்காக நாம் மேலும் பல வழிகளில் செயற்படுவது அவசியமாகின்றது. இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழலில் இது ஒரு முதன்மையான அரசியல் தேவையாக மாறியிருக்கின்றது. ஒரு அரசியல் இயக்கம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு திருப்பத்திலும் குறிப்பான அரசியல் தேவைகளும், செயற்பாடுகளும் முதன்மை இடத்திற்கு வருகின்றன. அந்தத் தேவைகளை சரியாக அடையாளம் கண்டு அதற்கேற்ப செயற்படுவதன் ஊடாகத்தான் ஒரு சமூகம் தனது உரிமைகளை வென்றுகொள்வது சாத்தியமாகின்றது.

நமது அரசியல் இயக்கத்தில் ஏற்கெனவே நிகழ்ந்த பல திருப்பங்களின் போது நாம் செயலற்றவர்ளாக இருந்திருக்கின்றோம். அல்லது நமது செயற்பாடுகள் சரியான இலக்கை நோக்கி உரிய முறையில் குவிக்கப்படவில்லை. இதனால் நாம் ஒவ்வொரு அரசியல் திருப்பத்திலும் பரிதாபத்திற்குரிய முறையில் பின்தங்கியிருக்கின்றோம். நமக்கு முன்னே நம்மை அடக்குபவர்கள் வெகு தூரம் முன்சென்று விட்டிருபபதைக் கண்டு குமுறியிருக்கிறோம். அண்மைக்கால உதாரணங்களாக, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பங்கேற்கத் தவறினோம்; நமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதைத் தவறவிட்டோம்; பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்திலிருந்தே தனித்தரப்பாகப் பங்கேற்பதைத் தவறவிட்டோம்; பேச்சுவார்த்தைகளின் ஊடாக உருவாக்கப்பட்டிருக்கின்ற செயலணிகள் மற்றும் குழுக்களில் பங்கேற்பதை தவறவிட்டிருக்கின்றோம்.

ஆயினும், இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. நிரந்தர அரசியல் தீர்வை அடைந்து கொள்வதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டி இருக்கின்றது. அத்தகைய அரசியல் தீர்வில் நமது மக்களும் உள்ளடக்கப்படுவதற்கும், அவ்வாறான தீர்வுக்கு முன்னர் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற சமூக, நிர்வாக, மற்றும் அகக் கட்டமைப்புகள் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளில் நமது மக்களின் பங்கு உறுதிப்படுத்தப்படுவதற்கும் பேச்சுவார்த்தைகளில் நாம் தனித்தரப்பாகப் பங்கேற்பது அவசியமாகின்றது.

தனித்தரப்பாகப் பங்கேற்பதைச் சாத்தியப்படுத்துவதற்காக ஏற்கனவே, நாம் முன்னெடுத்த செயறபாடுகளும் போராட்டங்களும் உரிய பலனை அளிக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்வோமாயின் இன்னும் வலுவான, இன்னும் உறுதியான, இன்னும் தொடர்ச்சியான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன என்பதை உணரமுடியும். அவ்வாறு செயற்படக்கூடிய தகுதியும் உணர்வும் ஓர்மமும் நமது மக்களிடம் நிறையவே உண்டு.

-மருதூர் பஷீத்

## பேச்சுவார்த்தையின் திசையை மாற்றுவதற்கான தேவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுவிட்டது!

ஏலவே திட்டமிடப்பட்ட ஒழுங்கமைப்பில் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் இப்போது ஒரு "இடைக்காலத் தொய்வு" ஏற்படுவதற்கான அறிவிப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.





அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ராஜதந்திர காய் நகர்த்தலில் - இப்போது பெரும் மோதல் ஏற்பட்டுள்ளது. பேச்சு வார்த்தை என்ற பெயரில் அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஏமாற்றுவதாக புலிகள் தரப்பிலிருந்து இப்போது பகிரங்கமாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஒருவரையொருவர் ஏமாற்றி, சர்வதேச சமூகத்தின் முன் பெரும் மதிப்பையும் ஆதரவையும் யார் முதலில் பெறுவது என்ற காய் நகர்த்தலாகவே இப்பேச்சுவார்த்தை முன்நகர்ந்து சென்றதை உன்னிப்பாக பேச்சுவார்த்தை அரங்கை அவதானித்தோர் புரிந்து கொண்டிருப்பர். வொஷிங்டன் நிதி வழங்கும் மகா நாட்டில் புலிகள் அழைக்கப்படாததும், அரசாங்கம் தனியே அமெரிக்காவின் ஆதரவுடன் வொஷிங்டன் நிதி வழங்கும் முன்னோடி மாநாட்டை நடத்தி முடித்ததும் புலிகளுக்கு பெரும் அரசியல் நெருக்குதலைத் தோற்றுவித்திருக்கிறது.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் கடந்த ஒருவருடத்திற்கும் மேற்பட்ட கால எல்லையை இருதரப்பும் இராணுவ, பொருளாதார ரீதியாகத் தங்களை பலப்படுத்துவதற்கான இடைக் காலமாகவே பயன்படுத்தி வந்தனர். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் போக்கில் குறிப்பாக அமைச்சர் மிலிந்த மொரகொடவின் அரசியல் செயற்பாடுகள் புலிகளுக்குப் பெரும் அரசியல் அச்சுறுத்தல்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் யார் யாருடன் கூட்டுச் சேருகின்றது என்பதை நாங்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக புலிகளின் தலைமை பல்வேறு தடவைகளில் பகிரங்கமாக தெரிவித்தும் வந்துள்ளன.

இப்போது பேச்சுவார்த்தையை கால வரையறையின்றி ஒத்திப் போட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித் துள்ளது. டோக்கியோ நிதி வழங்கும் மாநாட்டிலும் பங்குபற்றுவதில்லை என கராராகத் தெரிவித்துள்ளது. இந்நிலைமையானது அரசியல் பேச்சுவார்த்தை அரங்கில் எப்படியான தாக்கத்தை எதிர் காலத்தில் ஏற்படுத்தப் போகிறது என்பது அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை மூலமே தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

ஆனாலும், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுக்கள் தட்டிக் கழிக்க முடியாது என்பது உண்மையாகும். ஏனெனில் சமாதானத்தின் மூலம் தமிழர் தரப்பை அரசாங்கம் ஏமாற்ற முடியாது என்பதை புலிகள் வலியுறுத்தியுள்ளனர். ஆனால், சமாதானத்தின் மூலம் முஸ்லிம்களை ஏமாற்றலாம் என அனைவரும் நினைப்பது இங்கு சகஜமாகி விட்டது. சமாதானத்தின் பெயரால் முஸ்லிம்களை ஏமாற்ற முடியாது என எப்போது நமது தலைமைகள் வாய் திறந்து சொல்வார்கள்?

## மூதூர் பிரதேச முஸ்லிம்கள் மீதான இன அழிப்பின் 22.04.2003 வரையான தரவுகள்

### மரணமடைந்தவர்கள் விபரம்

| மரணமடைந்தவர்கள் பெயர் | நிகழ்வின் தன்மை | சம்பவம் நடந்த இடம் | காலம் |
|---|---|---|---|
| கியாத்தும்மா | கடத்தப்பட்டவர்களில் ஒருவரின் தாய். தன் உயிரையே மாய்த்தார். | மூதூர் | 15.04.2003 |
| முஹம்மது தீன் (40) | துப்பாக்கிச் சூடு | பாலத்தோப்பூர் | 17.04.2003 |
| முகம்மது றஸ்ஸாவி (41) | துப்பாக்கிச் சூடு | இக்பால் நகர், தோப்பூர் | 21.04.2003 |
| ஜெ.மீராலெப்பை (50) | துப்பாக்கியால் சுடப்பட்ட பின் தலை துண்டிக்கப்பட்டது. | செல்வ நகர், தோப்பூர் | 22.04.2003 |

### காயமடைந்தோர் விபரம்

| காயமடைந்தவர் பெயர் | நிகழ்வின் தன்மை | சம்பவம் நடந்த இடம் | காலம் |
|---|---|---|---|
| அஹ்மதுஷா ஸலீம் | துப்பாக்கிச் சூடு | ஷாபி நகர், மூதூர் | 20.04.2003 |
| நாஹூர் சஹீலா | துப்பாக்கிச் சூடு | செல்வ நகர், தோப்பூர் | 22.04.2003 |

### காணாமல் போனோர் விபரம்

| காணாமல் போனோர் பெயர் | முகவரி | சம்பந்தப்பட்ட இடம் | காலம் |
|---|---|---|---|
| மஹ்பூல் நயீம் | நெய்தல் நகர், மூதூர் 01 | கடற்கரைச்சேனை | 31.03.2003 |
| அப்துல் றெஸ்ஸாக் ஜாபீர் | நெய்தல் நகர், மூதூர் 01 | கடற்கரைச்சேனை | 31.03.2003 |

### சூறையாடப்பட்டு எரிக்கப்பட்ட வீடுகள்

| கிராமசேவகர் பிரிவும் மொத்த வீடுகளும் | |
|---|---|
| ஆலிம்சேனை | 24 |
| தக்வா நகர் | 77 |
| பாலை நகர் | 13 |
| ஹைறியா நகர் | 73 |
| ஆஷாத் நகர் | 165 |
| பாரதி புரம் | 43 |
| பாலத்தோப்பூர் | 10 |
| மூதூர் கிழக்கு | 08 |
| தாஹா நகர் | 15 |
| ஜின்னா நகர்-மூதூர் | - |

இவ் இழப்புக்களுடன் பெருமளவிலான கால்நடைகள் இழக்கப்பட்டும், பல மீன்பிடிப்படகுகள் எரிக்கப்பட்டுமுள்ளன. இத் தரவுகள் ஆரம்பத் தரவுகளாகவே கொள்ளப்படல் வேண்டும். முழு இழப்புகளுக்கான மதிப்பீடுகள் நடைபெறுகின்றன.

(அ-ர)

### அகதி முகாம்களின் விபரம்

| முகாம்கள் | அகதிகளின் சொந்த ஊர்கள் | குடும்ப எண்ணிக்கை |
|---|---|---|
| பாலத்தோப்பூர் முகாம் (பள்ளிவாசல்) | - ஜின்னா நகர்<br>- பாலத்தோப்பூர் | 63<br>305 |
| 59 ஆம் கட்டை முகாம் | - ஜின்னா நகர்<br>- ஆசாத் நகர்<br>- பாரதி புரம் | 233<br>285<br>43 |
| அரபிக் கல்லூரி முகாம்/அண்டிய வீடுகள் | - | |
| அல் - ஹிலால் முகாம் (பாடசாலை) | - நெய்தல் நகர்<br>- மூதூர் கிழக்கு<br>- பாலநகர் | 1651 |
| தக்வா நகர் | - | 658 |
| சதாம் வித்தியாலய முகாம் | - தாஹாநகர்<br>- மூதூர் மேற்கு<br>- நடுத்தீவு<br>- மூதூர் மத்தி<br>- ஆனைச்சேனை | 224<br>273<br>454<br>73<br>412 |
| - ஜாயா நகர் | 493 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகம் உட்படப் பல துறைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான சக்திகளின் பின்னணி

-இளவரசன்

இலங்கை நாடு சுதந்திரமடைந்த பின்பும், அதற்கு முன்னும் இந்நாட்டு நலனில் எப்பொழுதும் முஸ்லிம் தலைவர்களினதும், முஸ்லிம் மக்களினதும் ஈடுபாடு மிக ஆழமானதாக வேரூன்றி இருந்து வந்துள்ளது. அதன் பிரதிபலிப்புத்தான் மாறி மாறி பதவிக்கு வந்த அரசுகளில் முஸ்லிம் அமைச்சர்களினதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்களிப்பினால் இடம்பெற்ற பரவலான சமூக அபிவிருத்திகளாகும்.

முஸ்லிம் மக்களின் பங்களிப்பு நாட்டின் பல்வேறு துறைகளிலும் பரிணாம வளர்ச்சி கண்டு வந்த வேளையில்தான் கடந்த வருடம் பெப்ரவரி 22 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் இடையிலான யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டதில் இருந்து முஸ்லிம் சமூகம் சார்பாக கடுமையாக சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். முஸ்லிம் சமூகத்தைச் சின்னா பின்னமாக்கும் சதி நடவடிக்கைகளின் பின்னணியில் செயல்படும் சில சதிநாசகார இனவாதிகளின் செயற்பாடுகள் அம்பலத்திற்கு வந்துள்ளன. அவற்றில் சிலவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

1. மறைந்த மாமனிதர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் வகித்த கப்பல்துறை, துறைமுகங்கள் அமைச்சினால் குறிப்பிட்ட சில காலத்திற்குள்ளேயே ஆயிரக்கணக்கில் முஸ்லிம் இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புப் பெற்றார்கள். வடக்கு கிழக்கில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றன. அவற்றில் முதன்மையானது மாமனிதர் அஷ்ரஃப் அவர்களின் கனவான தென் கிழக்குப் பல்கலைக்கழகம். அடுத்தது ஒலுவில் துறைமுக நிர்மாணத் திட்டத்தின் ஆரம்ப வேலைகள். அமைச்சர் அஷ்ரஃப்பின் மறைவினால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் இன்றும் அதேநிலையிலும், சில இடங்களில் அதைவிடவும் மோசமான நிலையிலும் உள்ளன.




2. கிழக்கு அபிவிருத்தி அமைச்சு என்று ஒரு அமைச்சு இருக்கின்றது. கிழக்கில் ஒரு கம்புகூட இந்த அமைச்சினால் இன்னும் நாட்டப்படவில்லை. ஒரு சிறிய நடைபாதை கூட செப்பனிடப்படவில்லை. இதுதான் இந்த அமைச்சின் பரிதாப நிலை.

மேலும் இந்த அரசில் பல அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்தும் முஸ்லிம்களின் இழிவுக்கும் அவர்களுக்கு எதிரான சதிகளுக்கு எதிராகவும் எவரும் வாய்திறந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறுமுன் இருந்த வாய்க்கு இரும்புத்திரையிட்ட சூழ் நிலையே மறுபடியும் தோன்றியுள்ளது.

அரசாங்க நிருவாக சேவைப் பரீட்சைகளில் கடந்த வருடங்களில் நூற்றுக்குப் பதினைந்து தொடக்கம் இருபத்தைந்து வீதம் சித்தியடைந்த முஸ்லிம்கள் கடந்த வருடம் ஒரு வீதமேனும் சித்தியடையவில்லை. பரீட்சை வினாப்பத்திரம் திருத்தியவர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதுமட்டுமல்ல, சுங்கத் திணைக்களம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், ஊடகத்துறை போன்றவைகளில் முஸ்லிம்களின் பிரவேசம் திட்டமிட்டு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊடகத்துறையை எடுத்துக் கொண்டால், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் திறமையாக செய்தி வாசித்து வந்த பல முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். ஒலிபரப்புத்துறைக்கு கிஞ்சித்தேனும் தொடர்பற்றவர்கள் மூலம் நேர்முகங்கள் நடத்தப்பட்டு முஸ்லிம் அறிவிப்பாளர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், முஸ்லிம் நிகழ்ச்சிகளின் நேர அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. ரூபவாஹினியிலும் இதே நிலைதான்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பு அதிகம் இருந்த பத்திரிகைதான் "தினகரன்." இப்பத்திரிகையில் பிரதி ஆசிரியராக பிரபல பத்திரிகையாளர் எம்.எச்.எம்.ஷம்ஸ் பணியாற்றி மறைந்ததைத் தொடர்ந்து அப்பதவிக்கு முஸ்லிம் ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. மாறாக, ஆசிரிய பீடத்தில் இருந்த அநேகமான முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். புலிகள் - அரசு யுத்த நிறுத்தத்தின் பின்பு அங்கு பிரதம ஆசிரியராகப் பதவியேற்ற இனவாத மன்னன், கையில் கத்தியுடன் வெறிபிடித்து அலைந்து கொண்டிருப்பதாகவே லேக்ஹவுஸ் நிறுவனச் செய்திகள் தெரிவிக்கின்றன. திறமையுள்ள முஸ்லிம்களைக் கண்டால், இவருக்கு ஒருவகைப் பேயாட்டம் ஏற்பட்டு விடுகிறதாம். உலகை ஏமாற்ற தன்னுடன் காரியத்தில் சித்தரான ஒரு அப்பரை வைத்துக் கொண்டு முழு முஸ்லிம் பத்திரிகையாளர்களையும் வெட்டி வீழ்த்துவதாக அறிய முடிகிறது. அண்மையில் தொடர்ச்சியாக இரு முஸ்லிம் திறமைமிகு இளைஞர்கள் பதவியில் இருந்து இவரால் இடை நிறுத்தப்பட்டார்கள்.

கிழக்கில் உள்ள இப்பத்திரிகையின் நீண்டகால நிருபர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள். முழுக்க முழுக்க முஸ்லிம் மக்கள் 90 வீதம் வாசிக்கும் இப்பத்திரிகையில் இப்பொழுதெல்லாம் முஸ்லிம் பிரதேச செய்திகள் வருவதில்லை. மாறாக, முஸ்லிம் அரசியல் வாதிகளை, முஸ்லிம் அரசியலைக் கொச்சைப்படுத்தும் செய்திகளும், நகைப்புக்கிடமாக்கும் கேலிச்சித்திரங்களும் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் விடவும், மற்றுமொரு துயராமான செய்தி யாதெனில், ஈராக் மீது நடத்தப்பட்ட யுத்தச் செய்திகளில் போர் தொடுத்த அமெரிக்க, பிரிட்டிஷ் ஆகிய பிரதான இரண்டு நாடுகளின் தலைவர்களான அந்த இரண்டு மனநோயாளிகளின் செயற்பாடுகளை ஆதரித்தே அனைத்துச் செய்திகளும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இதன்மூலம் இப்பத்திரிகை ஆசிரியர் சீ.ஐ.ஏயின் ஒரு கையாளா? என்ற கேள்வி முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தமிழ் மக்கள் மத்தியிலும் கேட்கப்படுகின்றது.

அனைத்தையும் மிஞ்சும் வகையில் இப்பத்திரிகை ஆசிரியர் ஊடகத்துறையில் உள்ள முஸ்லிம் அதிகாரிகளை இலக்கு வைத்து பல வகையான தாக்குதலும் நடத்தி வருகிறார். அந்த அதிகாரிகள் மீது திட்டமிட்டு சேறுபூசும் நடவடிக்கையிலும் இவர் ஈடுபட்டுள்ளார். அத்துடன் தனது சொந்தக் கையெழுத்தில் இந்த முஸ்லிம் அதிகாரிகளை ஒஸாமா பின்லாடனுடன் ஒப்பிட்டு அரச மேல்மட்டத்திற்கு மொட்டைக் கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளதாக முஸ்லிம் குரலுக்குத் தெரிய வந்துள்ளது. (அவர் கைப்பட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் - மொழிபெயர்க்கப்பட்டு இப்பத்திரிகையில் இடம்பெறுகிறது.)

இவ்வாறான இனவாதிகளின் கறை படிந்த கரங்களால் எழுப்பப்படும் பத்திரிகை இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலைக்குமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இவ்வாறான சம்பவங்கள் தொடரும் போது முஸ்லிம் தலைவர்கள் கண் இருந்தும் குருடர்களாக இருப்பது ஏன்?

# 'புனித பூமியிலே'.... பலஸ்தீன நாடகம்

## சில குறிப்புகள்

மறைந்த எழுத்தாளர் வை. அஹ்மத் அவர்களின் "முக்காடு" சிறுகதைத் தொகுதியிலிருந்து, "புனித பூமியிலே..." நாடக வடிவம் பெற்றுள்ளது. ஆசிரிய ஆலோசகர் யூ. அஹ்மத் அவர்களின் நெறியாள்கை இளைய சமூகத்தின் விடுதலை வேட்கையை கூர் தீட்டிப் பார்த்துள்ளது.

இன்று உலகில் காணப்படும் நீண்ட காலப் போராட்டங்களில் பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் ஒன்று. இஸ்லாமிய வர லாற்றில் பல நபிமார்களின் பாதங்கள் பட்ட மண் அது. முஸ்லிம்களின் முதல் கிப்லாவை இன்று வரை சுமந்து பெருமை சேர்க்கும் புனித பூமி பலஸ்தீன்.

புனித பூமியிலே... நாடகம் ஏற்கனவே கல்குடா தொகுதியில் காண்பிக்கப்பட்டதோடு, உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டிலும், காத்தான்குடியில் ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்திலும் அரங்கேற்றப்பட்டு பலரின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. பேராதனை தமிழ்ச் சங்கத்தின் நாடகப் போட்டியிலும், பல்கலைக்கழகத்திலும் அரங்கேற்றப் பட்டு, முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

புனித பூமியிலே மூன்று வகையான அம்சங்களை பார்வையாளர்களுக்கு சொல்ல முயல்கிறது. நான் பார்த்து உணர்ந்த மூன்று அம்சங்களும், ஒரு விடுதலை மண்ணில் மிக உன்னதமான போராட்டத்திற்கான விதைகளாக இருக்கின்றன.

(I) பலஸ்தீனத்தின் இருப்பு குறித்த பார்வை. தன் சொந்த நாட்டை கபடத்தனமாக பறித்தெடுத்த விரோதிகளால் அந்த மக்கள் அகதிகளாக சிறைவைக்கப்பட்டிருப்பது இந்த அகதி வாழ்வின் மன உளைச்சல்களை, அவமானங்களை இராணுவத்தின் அடக்கு முறைகளை, இஸ்ரேலின் அடாவடித்தனங்களை, முற்பகுதி பதிவு செய்ய முனைந்துள்ளது.

இதில் காலமே பேசுகிறது. உலகில் வாழும் பலகோடி முஸ்லிம்களின் காதுகளுக்குள் தீ வார்ப்பது போல் விடுதலையை அவாவி மேவும் காலத்தின் குரல் நெஞ்சை சுடுகிறது. ராஜ சுகபோகத்தில், அமெரிக்க நாயின் பிடியில் சிக்கித் தடுமாறும் முஸ்லிம் நாடுகளை நோக்கி அந்த அறை கூவல் செல்லவில்லை என்பதுதான் வேதனை.

முற்றுகை - தேடுதல், சித்திரவதை போன்ற காட்டு மிராண்டித்தனமான இஸ்ரேல் இராணுவத்தின் வல்லமைகளை மிக உணர்ச்சி பூர்வமான காட்சிகளாக இளைஞர்கள் நடித்துள்ளனர்.

(II) பலஸ்தீனத்தின் போராட்டம் உச்சத்தைத் தொடுவதற்கான நடவடிக்கைகள். சுடச் சுடத் தங்கம் மினுக்கம் கொடுப் பதை போல பலஸ்தீன இளைஞர்களின் அநியாயமான இரத்தத் துளிகள் ஒரு உத்வேகமான போராட்டத்திற்கு அவர்களை தயாரபடுத்துகின்றன.

தொடர் கொலைகள், அடக்கு முறைகள் ஒரு சமூகத்தின் பொறுமையை நீண்ட காலத்திற்கு கடிவாளமிட்டு பாதுகாக்காது என்பதற்கு பலஸ்தீனப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாகும்.

(III) போராட்டம் தீவிரமடையும் போது, சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பும் அதற்கு தீயிட்டு, எரிதணலாகின்றது. இறை நாமம் கூறி இனிய போராட்டத்திற்குத் தன் மகனை உரமாக்கும் தாய்மார்களை பலஸ்தீனப் போராட்டம் உருவாக்கியது. துப்பாக்கிகள், அரக்கர்களின் சித்திரவதைகள் பெண்மை யின் மனதுக்குள் எத்துணை வீராவேசத்தை வழங்கியுள்ளது





என்பதற்கு இதுவோர் தகுந்த சாட்சியாகும்.

முற்றிலும் மாணவ சமூகமொன்று இந்த நாடகத்தை துடிப்புமிக்க, உணர்ச்சிமிக்க பாத்திரங்களாக மாற்றியுள்ளது. அடக்கப்படும் மக்கள் தனது விடுதலைக்கான பலத்த குரலை புனித பூமியிலே நாடகத்தின் ஊடாக வெளிப்படுத்தி, ஒடுக்குமுறைக்கெதிரான தமது எதிர்ப்பை இங்கு அம்பலப் படுத்தியுள்ளனர்.

போராட்டத்திற்கான நிர்ப்பந்தங்களை மேலாதிக்க சக்திகள், சிறுபான்மையினர் மீது திணிக்கின்ற போது, அந்த போராட்டத்தின் வடிவம் மூர்க்கத்தனமான ஆங்காரத்துடன் முனைப்பு பெறுவது தவிர்க்க முடியாத அம்சம் என்பதை புனித பூமியிலே நாடகம் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

பலஸ்தீன விடுதலைக்கான இலக்கியங்கள் இன்று அதிகம் பேசப்படும் தருணம். நுஃமான் அவர்களினால் மொழிபெயர்க்கப்பட்ட பலஸ்தீனக் கவிஞர்களின் கவிதைகள் எத்துணை கனல் தீரம் மிக்கது என்பதை நாமறிவோம். அப்படி இருந்தும் பாரதியின் "அச்சமில்லை, அச்சமில்லை" என்ற கவிதையை இந்நாடகத்தில் தவிர்த்திருக்கலாம் என்பதுதான் என் பணிவான கருத்து. தவிர - அரங்கம், ஒளி, ஒலியமைப்பு, போன்ற குறை களை புறந்தள்ளிவிட்டு, நாடகத்தின் உயிர்த் தன்மையை அனுபவித்து ரசிக்கும் போது, அடக்கப்படும் இனத்திற்கு, சமூகத்திற்கு ஒரு துளி கண்ணீரையாவது விடவேண்டும் என்ற ஆதங்கம் நம்மை வந்து கவ்வுகிறது.

விரைவில் இந்நாடகம் புதுப் பொலிவுடன், இன்னும் சில ஆரோக்கியமான சிந்தனைகளுடன் கொழும்பில் அரங்கேற்றம் பெறப் போகிறது என்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தி. இந்நாடகத்தை முன்னின்று நெறிப்படுத்தும் யூஅஹ்மத் ஆசிரியரும், அவரது குழுவினரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் பயிற்றுவிக்கும் சிறிய வயதுப் போராளிகளும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே!

- ஓட்டமாவடி அறபாத்.

*(முஸ்லிம் குரல் பத்திரிகை நிதியத்திற்காக மே மாதம் நடுப்பகுதியளவில் கொழும்பு, கல்முனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் இந்நாடகம் அரங்கேற்றப் படவுள்ளது.)*

# தமிழக அரசியல் கலாசாரம் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குத் தேவைதானா?

அண்மைக் காலமாக முஸ்லிம் அரசியல்வாதிகள், குறிப்பாகத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மக்கள் மத்தியிலே செல்லுகின்ற பொழுது புனித தக்பீர் முழக்கமும், மேடைகளில் பேசுகின்ற பொழுது வசனத்துக்கு வசனம் கரகோஷமும், நடந்து செல்லுகின்ற பொழுது தோளிலே சுமந்து செல்லும் பழக்கமும் தொடர்ந்து இடம்பெற்று வருவது வெட்கத்துக்கும், வேதனைக்கும் உரிய நிகழ்வுகளாகும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தலைவர்கள் தங்களுக்கு மிக நெருக்கமானவர்களிடம் உத்தரவிட்டு அவர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படும் சில உற்சாக மடையர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றதே தவிர மக்கள் தாமாக முன்வந்து இவற்றில் எதையுமே செய்வதில்லை.

தோளிலே சுமப்பதைப் படம் பிடித்து பத்திரிகைகளிலும், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் பகிரங்கப்படுத்தி ஆஹா...! எப்பேர்ப்பட்ட செல்வாக்குமிக்க தலைவர் என்று ஏனைய மக்களையெல்லாம் நம்பவைக்கும் இந்த ஈனத்தனமான இழிசெயலை ஏனைய அரசியல் கட்சிகள் வேண்டுமானால் செய்துவிட்டுப் போகட்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இதுதேவைதானா?

ஆலிம்களைக் கண்டு தக்பீர் சொல்லாதவர்கள், உலமாக்களைக் கண்டு தக்பீர் சொல்லாதவர்கள் அல்குர்ஆனின் அருள் வசனங்கள் அனைத்தையும் தங்கள் நெஞ்சங்களிலே பதிவு செய்து வைத்திருக்கும் மரியாதைக்குரிய ஹாபிஸ்களைக் கண்டு தக்பீர் சொல்லாதவர்கள், பெருநாள் தொழுகையின் போது கூட பள்ளிக்குள் தக்பீர் முழக்கத்தின் சத்தம் வெளிவரும்படியாக தக்பீர் சொல்லாதவர்கள் சுயநலன்களையே பெரும்பான்மையாகவும் சிறிதளவு பொதுநலனை தொட்டுப் பார்ப்பவர்களாகவும் விளங்கும் அரசியல்வாதிகளைக் கண்டு தக்பீர் முழக்கம் செய்வது ஏன்? தக்பீருக்கும் இந்த அரசியல்வாதிகளுக்கும் என்ன தொடர்பு?

பதவியைத் தக்க வைத்துக் கொள்ள இவர்கள் கையாளும் தற்காப்பு ஆயுதமா தக்பீர் முழக்கம்?

ஆலிம்கள், உலமாக்கள், ஹாபிஸ்கள் தங்களைக் கண்டு மற்றவர்கள் தக்பீர் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்ப்பதுமில்லை; அதற்காக ஏற்பாடு செய்வதுமில்லை.

ஆனால் அரசியல்வாதிகள் கூலிப்படைகளை ஏற்பாடு செய்து அவர்கள் மூலம் தக்பீர் முழக்கத்தை ஆரம்பித்து, ஊர் ஓடினால் ஒத்து ஓடு என்பது போல் ஏனைய மக்களையும் தக்பீர் சொல்ல வைக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இவை மாத்திரமல்ல. ஓர் அரசியல்வாதி தோளிலே சுமக்கப்படுகின்ற பொழுது எத்தனை உலமாக்கள் கண்ணியத்துக்குரிய ஹாபிஸ்கள் கீழே நிற்கின்றார்கள் என்பதை உற்சாகமடையர்களின் தோளிலே சவாரிசெய்யும் தலைவர்கள் உணரவேண்டாமா? தாங்கள் தூண்டவில்லை. தானாக நடக்கிறது என்று மறுப்புரைப்பதாக இருந்தால் அதனைத்தடுக்க வேண்டாமா? உற்சாகமடையர்களும் ஒரு கணம் சிந்திக்க வேண்டாமா?

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தோளிலே சுமக்கப்படுவது ஜனாஸா என்பதையும் அது வைக்கப்பட வேண்டிய இடம் கப்று என்பதையும் சொல்லியா தெரிய வேண்டும்?

காலிலே விழுவதும், தோளிலே சுமப்பதும் தமிழகத்து அரசியல் கலாசாரம்.

அல்குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டுமே அடிப்படை அரசியல் சித்தாந்தம் என்று சொல்லிக்கொள்ளும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இது தேவைதானா? சிந்தியுங்கள்.

ஆர்ஜேயெஸ்.

# நிலவு வண்டி

மரங்களின்,
வேர்களுக்குள்
எனது குடியிருப்பு!

பொழுது,
வருவது போவதெல்லாம்
எனக்குத் தெரியாது!

ஒவ்வொரு,
சுவாசிப்பின் போதும்
முன்பு,
இழந்தவைதான்
வந்து போகின்றது.

கவிதை வரும்
கண்ணீர் வரை
எல்லாம் சொல்லும்!

இடுப்பு உடைந்த
என் சமூக உம்மா
அடிக்கடி
வந்து போனாலும்



முகம் பார்த்து கதைக்க
எனக்கு விருப்பமில்லை!

நிம்மதியோடு,
குந்தியிருந்து
எனக்கொரு
ஆயுதம் தயாரிக்கத்தான்
பெரும் ஆசை!

நிலவின்,
மேல் குந்தி
என் -
அகதி இனத்தை பார்க்க
ஊர் வருவேன்

பார்ப்போம்!
ஒரு மோதல் மோதி
என் -
இரத்தத்தை
ஆக்கிரமிப்பு செய்தவனிடம்!

-முகமட் அபார்

# தலைவர்களே!

எம்மிடம் ஓட்டுக்கேட்கும்போது "முஸ்லிம்களின் உரிமைகளை வென்று தரப் போவதாகவும் அதற்காக பட்டம் பதவிகளை கால்தூசாக எண்ணி அவற்றைத் துறந்து விடப்போவதாகவும்" தானே கூறினீர்கள். முழு அமைச்சு, பாதி அமைச்சு, தூதுவர் பதவி, போன்ற இரைகளை விழுங்கி சிக்கி விக்கப்போவதாக கூறவில்லையே. நீங்கள் எம் உரிமைகளை வென்று தருவீர்கள் என்று நம்பித்தானே ஓட்டுப்போட்டோம். இப்போது எமது ஓட்டுக்கள் எம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை உருவாக்கப் பயன்பட்டிருப்பதை நாளாந்தம் உணருகிறோம்.

எமது தேசிய இனத்துவ அடையாளத்தை அழித்து எமது பாதுகாப்புக்கு சவாலாக அமையக்கூடிய சமாதான ஒப்பந்தம் எம்மைக் கருவறுப்பதாகப் புரிகின்றோம்.

எமது கையால் எமது கண்களை நாம் குத்திக்கொள்ள விரும்பவில்லை.

ஓட்டுப்போட்டுவிட்டு ஓட ஓட விரட்டித் தினம் தினம் குதறப்படுகிறோம்.

எம் தலைவர்களே! எப்போது எமது வாக்குப் பலத்தை, எமது இருப்பைப் பாதுகாக்கப் பயன்படுத்தப் போகிறீர்கள். தயவு செய்து நாம் வாழும்போதே பயன்படுத்துங்கள், என வினயமாக மன்றாட்டமாக கேட்டுக்கொள்கிறோம்.

எம்மிடம் நீங்கள் ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு தந்த வாக்குறுதிகள், உரிமை முழக்கங்கள் அனைத்தும் அமானிதம் போன்றவையாகும். தயவுசெய்து அமானிதத்தைப் பாதுகாருங்கள்.

ஏனென்றால்,

"அமானிதம் பற்றி விசாரிப்பேன்" என அல்லாஹ் எச்சரித்துள்ளான்.

இப்படிக்கு
ஓட்டுப்போட்டவர்கள்.

# கனகலிங்கத்தின் கடிதம்

மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களுக்கு,

மதிப்பிற்குரிய ஐயா,

உங்களுக்குத் தெரியாமல் உங்களைச் சூழ அதிகமான எதிரிகள் உள்ளனர். அவர்கள் உங்களுடைய மிக நெருங்கிய முஸ்லிம் நண்பர்கள். அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், தினகரன் போன்ற அரச தமிழ் ஊடகங்களில் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பின்லாடன்களாகும் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடியும்.

1. அவர்கள் முழுமையாக தங்களது சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள்.

2. அவர்கள் (S.L.M.C) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், (N.U.A) தேசிய ஐக்கிய முன்னணி, ஆகிய சமாதானத்துக்கு எதிரான குழுக்களின் முகவர்கள்.

3. அவர்களில் மூவரின் பெயர்களை என்னால் குறிப்பிட முடியும்.

i. (S.L.B.C) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - பௌஸுல் ஹஸன் - தமிழ்ச்சேவை இயக்குநர்.

ii (S.L.B.C) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - யாகூப் - தமிழ்ச் செய்தி இயக்குநர்.

iii. தினகரன் - அமீன் - பதிப்பாசிரியர்

4. இவர்கள் தங்களைப் பத்திரிகை நிருபர்கள் என அடையாளப்படுத்திக் கொண்டு தங்களது உள்மட்ட கூட்டங்களில் (Indoor Meetings) கலந்து கொண்டு, பிறகுஅதுதொடர்பான விபரங்களை S.L.M.C, N.U.A, P.A, J.V.P போன்ற கட்சிகளுக்கும், அலவி, பௌஸி போன்றவர்களுக்கும் வழங்குபவர்கள்.

5. அவர்கள் தாங்களின் அரச ஊடகங்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகவும், சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பயன்படுத்துகின்றனர். தாங்கள் இவ்விடயம் தொடர்பாக தங்களின் நண்பர்கள் மூலம் கேட்டறிந்து கொள்ளலாம்.

6. இந்த யாகூப், அமீன் போன்றவர்கள் அந்த நேரம் பிரபாகரனால் நடாத்தப்பட்ட பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சில எதிர் வினாக்களை எழுப்பியவர்கள். இவர்கள் அரச ஊடகங்களின் பிரதிநிதிகளானதால் L.T.T.E யினர் இவர்கள் [illegible] அனுப்பப்பட்டவர்கள் என நினைத்தனர். இந்த ஒரு விடயமே போதும், தாங்கள் அவர்களை பதவி விலக்குவதற்கு.

7. இந்த பத்திரிகை நிருபர்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொரகொட ஆகியோருக்கு நெருக்கமானவர்கள். இவர்கள் தாம் அரசினதும், U.N.P இனதும் ஆதரவாளர்கள் என காண்பித்து பல உள்ளரங்க பேச்சுவார்த்தைகளில் நுழைந்து அவைகள் தொடர்பான விடயங்களை S.L.M.C., N.U.A., P.A., J.V.P. போன்ற கட்சிகளுக்கு வழங்குகின்றனர்.

8. முஸ்லிம்களின் விடயங்குறித்து மிகக் கவனமாக இருந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் முஸ்லிம்கள் என்பதனால். அவர்கள் U.N.P., P.A., J.V.P., S.L.M.C என்பதனால் அல்ல. முஸ்லிம்கள் அணியும் தொப்பிக்குள் சகலதும் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. தாங்களின் கடந்தகால அனுபவங்கள் ஊடாக இவ்விடயம் குறித்து தாங்கள் நன்கறிவீர்கள்.

9. நான் முஸ்லிம்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால், மதிப்பிற்குரிய ஐயா! தாங்கள் ஏன் இத்தகையவர்களை உயர் பதவிகளில் அமர்த்தியுள்ளீர்கள்?

அவர்கள் தங்களுடன் ஒன்றாக இருந்து எதிர்த்தரப்பினருக்குத் தகவல் வழங்குபவர்கள்.

10. * S.L.B.C - பௌசுல் ஹஸன், இவர் P.A. யைச் சேர்ந்தவர் என்பதனை S.L.B.C இல் உள்ள சகலரும் நன்கறிவர்.

* S.L.R.C யாகூப், இவர் தமிழ் மக்களுக்கு எதிரானவர், பலமான P.A ஆதரவாளர் என்பதனை S.L.R.C இல் உள்ள சகலரும் நன்கறிவர். இவர் அலவியின் செல்லக் குழந்தை.

* அமீன், இவர் P.A கட்சியை சார்ந்தவர். இவர் ஆட்சிக் காலத்தில் P.A பௌசி, அலவியோடு இருந்தார். பிறகு தற்போதைய U.N.P ஆட்சியில் அஸ்வர், காதர் ஆகியோருடன் இருப்பவர். நாளை S.L.M.C ஆட்சி வந்தால் ஹகீமின் ஆதரவாளராகவும் மாறிவிடுவார்.

11. மதிப்பிற்குரிய ஐயா, தயவு கூர்ந்து தாங்களிடம் நான் வேண்டிக் கொள்வதெல்லாம் இவ்விடயம் குறித்து தாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது தமிழ் மக்கள் தங்களின் பக்கத்தில் இருக்கின்றார்கள். தாங்களுக்கு இதுபோன்ற மூன்றாம் தர முஸ்லிம்கள் தேவையில்லை. தங்களுக்கு உதவவும், இணைந்து செயற்படவும் தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள்.

*த.கனகலிங்கம்,*
*பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(அண்மைக்காலமாக கொழும்பில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் கோரிக்கையும் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் நிராகரிப்பும்

ஆயிரக்கணக்கான முஸ்லிம் அப்பாவி மக்களின் படுகொலை, இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் தமது பூர்வீகப் பகுதிகளிலிருந்து விரட்டியடிப்பு, பலப் பல கோடி ரூபாய் பெறுமதியான உடைமைகள் அபகரிப்பு, பல்லாயிரக்கணக்கான வயல் நிலங்கள் ஆக்கிரமிப்பு இத்தனையையும் தமது இன்ப துன்பங்களில் கலந்து கொண்ட உரிமைப் போராட்டத்திற்குக் கைகொடுத்த முஸ்லிம்களுக்குச் செய்தவர்கள் எல்.ரீ.ரீ.ஈ.யினர்.

நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தில் சேர்ந்து தமிழர் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்துப் போராடினார்கள். இவ்வேளையில் சாதாரண ஒவ்வொரு முஸ்லிம் குடிமக்களும் தமிழர் போராட்டத்திற்கு மானசீகமாகவும், பொருளாதார ரீதியிலும் ஏனைய பங்களிப்புகளினூடாகவும் தமது ஆதரவை நல்கினார்கள்.

முஸ்லிம்கள் அச்சமின்றி சிங்களத் தேசத்திலே தமிழைப் பேசினார்கள். தமிழ்ப் புலமை பெற்ற முஸ்லிம் எழுத்தாளர்கள் கவிதை வடித்தார்கள், கட்டுரை எழுதினார்கள், தமிழிலே இலக்கிய இலக்கணம் படைத்தார்கள்.

முஸ்லிம் விவசாயிகள், வியாபாரிகள், மீனவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் கூலித் தொழிலாளர்கள் என பாமரர் தொடக்கம் படித்தவர் வரை அனைவரும் தமிழர் போராட்டத்திற்கு உதவினார்கள். யுத்த காலத்திலே வடக்கு கிழக்கில் முஸ்லிம் வர்த்தகர்களின் அர்ப்பணிப்புடனான சேவை மிகவும் இன்றியமையாததாய் இருந்தது. பல்வேறு அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடுகள், பாஸ் நடைமுறைகள், இராணுவக் கெடுபிடிகள் என்பவற்றுக்கு மத்தியிலே தமிழ்ப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் போய்ச் சேர்வதற்கு முஸ்லிம்கள் காரணமாய் இருந்தார்கள். முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட காலத்தில் கூட பால்மா இன்றி காட்டில் பட்டினியாய் வாடிய தமிழ்த் தாய்மாரின் குழந்தைகளுக்கு முஸ்லிம் பிரதேசத்திலிருந்தே பால்மாவும் மற்றும் மருந்துகளும், உணவும் சென்றன. இந்த யதார்த்தத்தை நீதமாகச் சிந்திக்கும் எவரும் மறந்துவிட முடியாது.

இதைவிட இராணுவத் தாக்குதல்களின் போதும் யுத்த நடவடிக்கைகளின் போதும் கெடுபிடிக்குள்ளான தமிழ் மக்களும், எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களும் முஸ்லிம் பகுதிகளில் வைத்துப் பாதுகாக்கப் பட்டார்கள். முஸ்லிம்கள் நீண்ட நாட்கள் வைத்துப் பாதுகாத்து உணவும் தங்குமிடமும் வழங்கி அடைக்கலம் தந்தார்கள். அகதிகளான தமிழ் மக்களுக்கு ஆறுதல் தந்து நிவாரணம் சேகரித்து உணவு உடை உறையுள் அளித்தார்கள்.

ஆனால், இவையெல்லாம் செய்த முஸ்லிம் மக்களுக்கு இறுதியில் நேர்ந்தது என்ன? நித்திரையின் போதும், பாலகனுக்குத் தாய் பால் கொடுத்துக் கொண்டிருந்த போதும், அமைதியாக இறைவனைத் தொழுது கொண்டிருந்த போதும், பசிவயிற்றை நிரப்ப தொழிலுக்குச் சென்ற போதும் அப்பாவி முஸ்லிம்கள் பதைபதைக்க கொல்லப்பட்டார்கள்.

இயக்கத்தில் இணைந்து கொண்டு தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு தமது சமூகத்தின் சார்பில் பங்களித்த முஸ்லிம் இளைஞர்கள் என்ன ஆனார்கள்?....நிராயுத பாணிகளாக்கப்பட்ட அவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். படையினருக்கும் பொலிசாருக்கும் தெரியாமல், பட்டினியாய்க் கிடந்த தமிழ் சமூகத்திற்கு உணவுப் பொருள் கொண்டு சேர்த்த அப்பாவி முஸ்லிம் விவசாயி, வியாபாரி, தொழிலாளி, மீனவர் எல்.ரீ.ரீ.ஈ. யினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் அரச நிர்வாகம் சீர்குலைக்கப்பட்டது போன்று முஸ்லிம் பகுதிகளிலும் அரச நிர்வாகம், திட்டமிட்டு சீர்குலைக்கப்பட்டது. சிவில் நிர்வாக ஒத்துழையாமை (Civildas Obedient Campain) எச்சரிக்கையை விடுத்து கடமைக்குச் செல்வோருக்கு கொலை அச்சுறுத்தலையும் விடுத்தார்கள்.

முஸ்லிம் பகுதிகளுக்கான மின்சார விநியோகம், தொலைத்தொடர்பு என்பன துண்டிக்கப்பட்டன. முஸ்லிம் பகுதிகளில் மாத்திரம் அமைந்திருந்த தொலைத்தொடர்புக் கோபுரம், மின் நிலையங்கள், மின் மாற்றிகள் என்பன குறிவைத்துத் தாக்கப்பட்டன. ரெயில், பஸ் போக்குவரத்துக்கள் முஸ்லிம் பகுதிகளில் திட்டமிட்டுத் தாக்கப்பட்டன. இதனால் இராணுவ வழித்துணையோடு வாரத்தில் இருநாட்கள் மட்டுமே முஸ்லிம்கள் கிழக்கில் பயணம் செய்ய முடிந்தது. அரச கட்டுப்பாடு பகுதிகளிலும் முஸ்லிம் பகுதிகளிலும் மாத்திரமே இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டு சீர்குலைவு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், முற்றிலும் எல்.ரீ.ரீ.ஈ. யினரின் கட்டுப்பாட்டிள்ள பகுதிகளில் ஒரு மின்மாற்றி கூட தகர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றுவரை முஸ்லிம்கள் கிழக்கில் சுதந்திரமாகச் சென்று தொழில் செய்துவர முடியவில்லை. காட்டிற்கு விறகு வெட்டச் செல்வோர் கட்டி வைத்துத் தாக்கப்பட்டு அவர்கள் கொண்டு செல்லும் சைக்கிள், கோடரி, எருது மாடுகள், மாட்டு வண்டிகள் என்பன அபகரிக்கப்படுகின்றன. கப்பம் பெறப்பட்ட பின் அப்பாவி முஸ்லிம்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

முஸ்லிம் வியாபாரிகள், விவசாயிகள், மீனவர்களிடமிருந்து 'வரி' என்ற பெயரில் கப்பம் அறவிடப்படுகிறது. அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஹக்கீம்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவற்றின் பின்னரும் முஸ்லிம்கள் மீது தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ. யினரால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் இவை.

இதுவெல்லாம் அரசு-புலிகள், ஹக்கீம்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்தான் நடந்தது. என்று அரச நிருவாக இயந்திரத்தை இயங்க விடாமல் செய்து கடமைப் புறக்கணிப்பைச் செய்ய வைத்து காரியாலயங்களையும் கட்டிடங்களையும் அழித்தார்கள். ஆனால், இன்று முஸ்லிம் பகுதிகளில் இருக்கும் ஒரு சில அரச அலுவலகங்களையும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மாற்ற முயற்சிக்கிறார்கள்.

முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அந்த விளைபொருட்கள் முஸ்லிம்களுக்கே விற்கப்படுகின்றன. முஸ்லிம்களிடமிருந்து கடத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான கால் நடைகளிலிருந்து கறக்கப்பட்ட பால், தயிர் என்பன முஸ்லிம்களுக்கே மீண்டும் விற்கப்படுகின்றன. முஸ்லிம்களின் பழத்தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட கனி வர்க்கங்கள் முஸ்லிம் பிரதேச சந்தைகளுக்கே கொண்டு வரப்படுகின்றன. முஸ்லிம்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களது ஆளுமையின் கீழிருந்த பகுதிக் காடுகளிலிருந்து விறகு வெட்டப்பட்டு அவையும் முஸ்லிம்களுக்கே விற்கப்படுகின்றன. முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், உளவு இயந்திரங்கள், லொறிகள், வேன்கள், படகுகள், தோணிகள், மாட்டு வண்டிகள் என்பன எல்.ரீ.ரீ.ஈ. யினரின் போக்குவரத்திற்காகவும் மற்றும் பொருட்களை ஏற்றியிறக்குவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வளவு நடந்தும் பரந்த தமது பூர்வீகப் பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் இன்று கிழக்கில் திறந்த வெளி அகதி முகாம்களில் வாழ்வது போன்று வாழ்கின்றார்கள்.

**ஏ.எச்.ஏ. ஹுசைன்**



எனினும் மிகக் குறுகிய பிரதேசத்திற்குள் அவர்கள் வாழ்ந்தாலும் விடா முயற்சி காரணமாக முஸ்லிம்கள் அயராது பாடுபட்டு முன்னேறியிருக்கின்றார்கள். முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று வீட்டுப் பணிப்பெண் வேலை செய்து கல் வீடு கட்டியுள்ளார்கள். இதனால், கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களின் முகப்புப் பகுதி கடைகளும், வீடுகளுமாய் கட்டிடக் காடாய்க் காட்சி தருகிறது. எனவே இந்த முகப்புத் தோற்றத்தை வைத்துக்கொண்டு முஸ்லிம்கள் பற்றி பொய்யானதொரு கருத்தைக் கொடுக்க தமிழர் தரப்பு முனைந்து வெற்றியும் கண்டிருக்கிறது.

அதாவது முஸ்லிம்கள் யுத்த காலத்தில் தமிழர்களைச் சுரண்டியே தமது பிரதேசங்களில் கடைகளைக் கட்டி வீடுகளைக் கட்டி பொருளாதார ரீதியில் முன்னேறியிருக்கின்றார்கள். அதனால்தான் முஸ்லிம்களின் பிரதேசம் கடை, வீடு வாசல்களோடு கலகலப்பாகக் காட்சியளிக்க, தமிழர் பிரதேசங்கள் மயானம் போன்று காட்சியளிக்கின்றன என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறான பொய்யான கற்பிதத்தைப் பறைசாற்றுவதற்காக தமிழர், தரப்பு உதவி வழங்க வரும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களையும் அழைத்துக் கொண்டு முஸ்லிம் பிரதேசங்களின் முகப்புத் தோற்றத்தைக் காண்பித்து விட்டு தமிழ்ப் பகுதிகளுக்கே உதவி தேவை என்பதை வலியுறுத்துகிறார்கள்.

முஸ்லிம்கள் தமிழர் தரப்பில் அடக்கி ஒடுக்கப்பட்டதற்கு இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டதற்கு, திட்டமிட்டு நசுக்கப்பட்டதற்கு எண்ணிக்கையிலடங்காத ஏராளமான சம்பவங்களும் கடந்தகால கசப்பான அனுபவங்களும் உள்ளன.

இவ்வளவு அடக்குமுறைகள் நடந்து கொண்டிருக்கின்ற போது, ஏன் முஸ்லிம்கள் தங்களுக்கு உரிமையான பிரதேசங்களைத் தாங்களே ஆள்வதற்குச் சிந்திக்கக் கூடாது?

வடக்கு கிழக்கில் பேரினவாதிகளாக யுள்ள தமிழர் தரப்பு அப்பகுதிகளில் சிறுபான்மையினராயுள்ள முஸ்லிம்கள் மீது காலா காலமாக அடக்குமுறை ஆட்சி செலுத்தியே வந்துள்ளார்கள். ஆயுத பலத்தோடு கூடிய பேராதிக்க வெறி இப்பொழுது அவர்களிடம் அதிகரித்துள்ளது.

கடந்த காலத்திலும் ஏன் இப்போதும் கூட தமிழர் போராட்டத்திற்கு தோளோடு தோள் நின்று உதவிய முஸ்லிம்களை அரவணைத்துச் செல்வதற்கு தமிழர் தரப்பும் எல்.ரீ.ரீ.ஈ.யினரும் தவறியிருக்கிறார்கள். இதனால்தான் முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கான தனியான நிர்வாக அலகு பற்றிச் சிந்திப்பதில் எந்தத் தவறுமில்லை. இது சமயோசிதமானது.

1985ம் ஆண்டிலிருந்து இன்றுவரை வடக்கு கிழக்கில் தமது பூர்வீகப் பூமியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் நாட்டின் நாலாபுறமும் போக்கிடமின்றி நாதியற்று அலைகிறார்கள். இந்நிலை இன்று கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும், நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுக்கும் இனிமேல் ஏற்படக்கூடாது.

அவ்வாறு தமிழ்ப் பேரினவாதத்தாலோ அல்லது சிங்களப் பேரினவாதத்தாலோ சிதறி வாழும் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டாலும் தமது ஆளுகையின் கீழ் உள்ள அதிகார பிராந்தியத்திற்குள் முஸ்லிம்கள் தஞ்சமடைய முடியும்.

எனவேதான் முஸ்லிம்கள் தனியதிகார நிர்வாக அலகு கேட்பது நியாயமாக்கப்படுகிறது. ஆனால் தாங்கள் வாழும் பிராந்தியத்தில் தங்களைத் தாங்களே ஆள்வதற்கு அதிகாரத்தைக் கோரும் முஸ்லிம்களைப் பற்றி தமிழர் தரப்பு ஏன் அச்சமடைய வேண்டும்?

## போன பஸ்ஸுக்கு கைகாட்டும் - ஹக்கீம்

அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டுமென வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இவர்களுடன் மு.கா. தலைவர் ரவூஃப் ஹக்கீமும் இணைந்து இவ்வாறு கோருவது வேடிக்கையாக உள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் போதே முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டுமென பல முஸ்லிம் இயக்கங்கள் கோரிக்கைவிட்டன. காத்தான்குடியில் நடைபெற்ற கிழக்கு மாகாண உலமா சபை மாநாட்டிலும் நான் இதனை எடுத்துக் கூறினேன். அப்போது இவை அனைத்தையும் ஒதுக்கிவிட்டு ஹக்கீம் அரச தரப்பில் விழுந்தடித்துக்கொண்டு கலந்து கொண்டார். முஸ்லிம் தரப்பு தேவையில்லை என்றும் கூறினார்.

இவ்வாறு பஸ்ஸை போக விட்டு விட்டு தற்போது ஞானம் வந்தவராக கை காட்டுவது புத்திசாலித்தனமாக தெரியவில்லை. ஹக்கீமை அரச தரப்பாக அரசாங்கம் ஏற்பாடு செய்த போதே, தம்மால் முடியாது, முஸ்லிம் தனித்தரப்பே தேவை என அழுத்தம் கொடுத்திருந்தால், பேச்சுவார்த்தைகளினதும் ஐ.தே.க. வின் ஆரம்ப காலமும் என்பதால் நிச்சயம் அரசும், புலிகளும் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். இப்போது பேச்சுவார்த்தையின் பல கட்டங்கள் முடிந்த பின் முஸ்லிம்கள் தனித்தரப்பு வேண்டுவது என்பது சமாதானத்தை குழப்பும் நடவடிக்கை என்றே அரசும் புலிகளும், சர்வதேச சமூகமும் கருதும்.

ஆரம்பத்திலிருந்தே முஸ்லிம்கள் தனித் தரப்பாக கலந்து கொள்வதற்கான நிறைய சந்தர்ப்பங்களை வேண்டுமென்றே தட்டிக் கழித்த மு.கா தலைவர் தற்போது அதனைக் கோருவது கூட உண்மையாகவா அல்லது அது கூட சமாளிப்பா என்று தெரியவில்லை. முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்க வேண்டு மென்பதே எமது ஆதங்கம். அது நிறைவேற வேண்டுமாயின் இவ்வாட்சியை மாற்றும் அளவுக்கு அழுத்தங்கள் தேவை. இதன் முதற் கட்டமாக பாராளுமன்ற பகிஷ்கரிப்பு. அமைச்சர் பதவி ராஜினாமா போன்ற நடவடிக்கைகளில் உண்மையாக உழைக்க வேண்டும். போன பஸ்ஸுக்கு கையைக் காட்டுவதை விட ஒன்று பஸ்ஸை நிறுத்த வேண்டும். அல்லது வேகமாக பாடுபட்டு வேறு பஸ்ஸில் ஏறி முன்னைய பஸ்ஸுக்கு முன்பாக செல்ல வேண்டும். இது தலைவர் ஹக்கீமின் கையிலேயே உள்ளது.

*மௌலவி முபாறக், கல்முனை*


## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 120/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 240/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)
காசோலையாகவோ, காசுக் கட்ட ளையாகவோ எமக்கு அனுப்பிவைக்க லாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடி யாக கையளிக்கலாம். காசுக்கட்ட ளையாக அனுப்புவதாக இருந்தால் Muslimkural Publication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.


## இஸ்லாமிய உணர்ச்சிக்கு வித்திடும் முஸ்லிம் குரல்

உங்கள் குரல் முஸ்லிம்களின் இதயங்களுக்கு பெருவிருந்தாகி இஸ்லாமிய உணர்ச்சிகளுக்கு இடமளிக்கும் என்பதில் ஐயமில்லை. வல்ல அல்லாஹ் முஸ்லிம் குரலைக் கொண்டு முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவனாக!

*எச்.எம்.எம்.இப்றாஹீம் நத்வி, காத்தான்குடி*

# முஸ்லிம் காங்கிரஸின் சிதைவில் ஹிஸ்புல்லாவுக்கு முக்கிய பாத்திரமுண்டு

முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் முக்கிய திருப்பங்களாக அமைந்தன. கட்சியின் வளர்ச்சிப் படியில் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், முஸ்லிம் தேசத்தின் திரட்சியை அடையாளப்படுத்திக் கொள்ளும் வகையிலும், ஒருவாய்ப்பாகவே 1989 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முஸ்லிம்கள் மத்தியில் நோக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தது. வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டதிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சியின் தலைமைப் பீடம் ஒரு பரீட்சார்த்தமான முறையை வகுத்துக் கொண்டது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதானமான மூன்று முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி, ஏறாவூர், கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் பொருட்டு தனது தேர்தல் வியூகத்தை கட்சி வகுத்தது.

காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பிரதேசங்களுக்குச் சமமான வாக்காளர்களைக் கொண்ட கல்குடா தொகுதி முஸ்லிம் பிரதேசம், சுதந்திர இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியைத் தானும் பாராளுமன்றம் அனுப்பும் வாய்ப்பைப் பெறவில்லை. இப்படியான சூழலில்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட முன்வந்தது. கல்குடாத் தொகுதியிலுள்ள முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பகால உறுப்பினர்கள் தலைமைப் பீடத்திற்கு தங்கள் தொகுதியின் நிதர்சன நிலையை எடுத்து விளக்கியதன் காரணமாக, தலைமைப்பீடம் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் எழுச்சியையும் அதன் ஐக்கியத்தையும் தொடர்ந்தும் கட்டி வளர்க்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இரண்டு இரண்டு வருடங்கள் என சுழற்சி முறையில் பாராளுமன்ற உறுப்புரிமையைக் கைமாறுவது என்று இணக்கம் காணப்பட்டது.

இந்த அடிப்படையில் கல்குடா தொகுதியில் இருந்து முகைதீன் அப்துல் காதர் அவர்களையும், ஏறாவூரிலிருந்து சட்டத்தரணி பசீர் அவர்களையும் காத்தான்குடியின் சார்பில் ஹிஸ்புல்லா அவர்களையும் வேட்பாளர்களாக நியமித்தது.

தலைமை செய்து கொண்ட



உடன்பாட்டின் அடிப்படையில் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது. ஓட்டமாவடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் பிரச்சார எழுச்சிக் கூட்டத்தில் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் [illegible] நிறுத்தப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். முஸ்லிம் காங்கிரஸின் தலைமை இவ்வெழுச்சிக் கூட்டத்தில் மூன்று வேட்பாளர்களின் கரங்களையும் உயர்த்திப் பிடித்து திரண்டிருந்த சன சமுத்திரத்தின் மத்தியில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் இரண்டு இரண்டு வருடங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் சுழற்சி முறையில் வழங்கப்படும் என்றும், முதலாவது இரண்டு வருடம் கல்குடா தொகுதிக்கும், அடுத்தடுத்த வருடங்கள் ஏனைய பிரதேசங்களுக்கும் வழங்கப்படுமென்று பிரகடனப்படுத்தப்பட்டது; சத்தியம் செய்யப்பட்டது. கட்சியின் தலைமை தனது தொண்டர்கள் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாக இப்படியான ஒரு அக்கினிப் பரீட்சையில் இறங்கியிருந்தது.

எங்கும் முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சி அணிகள்! மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் தேசத்தின் பட்டி தொட்டியெங்கும் உணர்வுப் பிரவாகம் எழுந்தது. மக்கள் தங்களுக்கு விடுதலை வந்ததாகவும், தாங்கள் ஏதோவொன்றை அடைந்து கொள்ளவிருப்பதாகவும் நம்பினார்கள். எதிரணியோ, மாற்றுக் கருத்துக்களோ ஏதுமில்லாது தேர்தலைச் சந்தித்தனர்.

தலைமைத்துவத்தால் கடுமையாக விதிக்கப்பட்டிருந்த நிபந்தனையான விருப்பு இலக்கத்தை அறிமுகப்படுத்துவதில்லை என்ற உடன்பாட்டை இரகசியமாக மீறி, ஒவ்வொருவரும் செயல்பட்டு வந்தனர். இதில் சகோதரர் சட்டத்தரணி பஸீர் அவர்கள் விதி விலக்கானவராகக் காணப்பட்டார்.

தேர்தல் முடிவு எதிர்பார்த்தபடி மட்டக்களப்பு மாவட்டத்தில் மு.கா.வுக்கு பிரதிநிதித்துவத்தை அளித்தது. தேர்தல் முடிவின் பின்புதான் கல்குடாத் தொகுதி மக்கள் அதிர்ச்சியைச் சந்தித்தார்கள். [illegible] கூடிய வாக்களித்த (முழுக்க முழுக்க [illegible]) பெரும்பான்மையான கல்குடா வாக்காளர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

கல்குடாத் தொகுதி மக்கள் தலைமைப் பீடத்திடம் நீங்கள் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கேட்டார்கள். தலைமை, சகோதரர் ஹிஸ்புல்லாவை பதவியைத் துறந்து கல்குடா தொகுதிக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டது. ஆனால், அதனை தலைமையால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

எனவே தலைமையால் கல்குடா தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுக்கு இரண்டாவது வருடம் முடிந்ததின் பின்னால் ஹிஸ்புல்லாஹ் அவர்களை பதவி துறக்கச் செய்து தங்களுக்கு வழங்குவதாக மீண்டும் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், ஹிஸ்புல்லாஹ் தலைமைப் பீடத்தின் கட்டுப்பாட்டை மீறி கதிரை சுகத்தை அனுபவிக்கும் சுயநலவாதியாக தொடர்ந்து செயல்பட்டு வந்தார். தலைமைப் பீடத்திற்கு இந்த இக்கட்டான நெருக்குதல் தலைகுனிவைக் கொடுத்தது. இதைத் தொடர்ந்து தலைமைப் பீடத்தை முதலாவது நீதிமன்றம் செல்லும் முடிவுக்கு இது கொண்டு வந்து நிறுத்தியது.

தலைமைப் பீடத்தின் நெருக்குதலும், ஹிஸ்புல்லாஹ்வின் வாக்குறுதியை மீறும் செயலும், தலைமைத்துவக் கட்டுப்பாட்டையும் மீறி, அப்போது ஆட்சியில் இருந்த அரசின் முஸ்லிம் அமைச்சர்களின் தயவுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை சிக்கலில் மாட்டிவிடும் போக்கில் செயல்பட்டு வந்தார். அத்துடன் முகைதீன் அப்துல் காதருக்கும் அவரின் நெருக்கமான ஆதரவாளர்கள் மீதும் திட்டமிட்டு பலவழிகளிலும் நெருக்குதலையும் கொடுக்கத் தொடங்கினார். இதனால், மு.காங்கிரஸின் பொருளாளராகவும் ஆரம்ப உறுப்பினராகவும் இருந்து வந்த முகைதீன் அப்துல் காதரும் அவரின் ஆதரவாளர்களும் மு.காங்கிரஸை விட்டு வெளியேறி யூஎன்.பி.யில் இணைந்து கொண்டனர்.

சகோதரர் ஹிஸ்புல்லாஹ் அன்று கட்சியின் கட்டுக் கோப்பையும், உறுதிப்பாட்டையும் மீறி யூஎன்.பி. யின் அமைச்சர்களில் ஒளிந்து கொண்டு தலைமை பீடத்திற்கு பலவழிகளில் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த வேளை, மறுபுறம் கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசங்களுக்கு சுதந்திரமாக காலடி எடுத்து வைக்க முடியாத ஒரு இக்கட்டான சூழலையையே ஹிஸ்புல்லாஹ் எதிர்நோக்கினார் என்றே சொல்ல வேண்டும்.

அன்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட அந்த ஐக்கியமும், புரிதலும், சவப் பெட்டியிலிட்டு ஆணியடித்த கைங்கரிகத்தை செய்த வரலாற்றுத் துரோகத்தின் முழு உருவாகவே ஹிஸ்புல்லாஹ் நோக்கப்படுகின்றார். அன்று ஹிஸ்புல்லாஹ்வால் மு.காங்கிரஸின் தலைமைக்கு ஏற்படுத்தப்பட்ட தலைகுனிவும், கட்டுப்பாடு மீறலும்தான் இன்றும், ஹிஸ்புல்லாவின் அரசியல் ஆளுமையில் பலத்ததாக்கத்தையும், சந்தேகப் பார்வையையும் தீராத வடுவாக எதிர்காலத்திலும் நின்று நிலைக்கச் செய்யப் போகின்றது. இன்னும் காத்தான்குடி, ஓட்டமாவடிப் பிரதேச மக்கள் மத்தியில் இணைய முடியாத பகை இருந்து வருகிறது. எக்கட்சி இம்மாவட்ட முஸ்லிம் மக்களை ஓரணிக்கு ஒன்று சேர்த்ததோ, அதே கட்சியே அக்கட்டுக் கோப்பையும் ஐக்கியத்தையும் சிதைக்க வழியமைத்து விட்டார் ஹிஸ்புல்லாஹ். இம்மாவட்டம் எதிர்நோக்கும் ஒவ்வொரு பொதுத் தேர்தல் காலத்திலும் ஹிஸ்புல்லாஹ் எவ்வளவுதான் பெரும் சக்தியாக தன்னை உருப்படுத்திக் கொண்டு களத்தில் நின்றாலும், ஓட்டமாவடி பிரதேச மக்கள் இவரை ஏற்றுக் கொள்வார்களா என்பதில் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் சந்தேகம்தான்.

**யூ. அப்துல்லாஹ், ஓட்டமாவடி.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது... லைலா அஷ்ராவி

அன்பான "முஸ்லிம் குரல்" வாசக நெஞ்சங்களே.....! அஸ்ஸலாமு அலைக்கும்!

"அச்சாறு" - நான் எழுத விளையும் பத்திககாக நான் தேர்ந்த தலைப்பு. பொதுவாக, ஒன்றை எழுதப்போய் எல்லாவறறையும் தொடவேண்டிய ஒரு வகையான எழுத்துக் குறைபாடு நான் எழுதத்தொடங்குகையில் என்னைப் பீடித்துவிடுகிறது. நான் இக்குறைபாட்டை சாதகமாக்கி என் பத்தியை எழுதலாமென்றிருககிறேன். அதனால் எல்லாம் கலந்த என் பத்திகு "அச்சாறு" எனப் பெயரிட்டுள்ளேன்.

பத்தி எழுத்தில் ஓரளவு அனுபமுள்ள எனது பத்திகள் பெரும்பாலும் தேடல் விளைந்த பகிர்வுகளாவே இருக்குமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதேவேளை முஸ்லிம் குரலின் பெறுமதியான இந்தத் தளத்தினையோ, வாசகர்களின் தீவிர வாசிப்புணர்வையோ தவறாகப் பிரதிபலிக்கமாட்டேன் என்ற உத்தரவாதத்தையும் தருகிறேன். எனது பத்தியில், மேற்கோள் புள்ளியுடன் வரும் சொறகள், அடைப்புக்குறி வாக்கியங்கள் கனதியானதென நான் உணர்கிறேன். நீங்களும் உணருங்கள்.

இப்பத்திக்காக நான் தேர்ந்த எனது புனைப்பெயர் "லைலா அஷ்ராபி". பலஸ்தீன விடுதலைப்போராட்டத்தில் இராணுவ மற்றும் அரசியல் கலாசார தளங்களில் பெரும் பங்காற்றிய இரு பெண்களது (லைலா காலித், ஹனான் அஷ்ராவி) பெயர்களை இணைத்து நானுருவாக்கிக் கொண்டது! என்றாலும், பத்தியின் தலைப்பும், பத்தியாளரின் பெயரும் பெரும் கரிசனைக்குரிய விடயமாக இருக்கவும் கூடாது.

## அமைதிக்கால அச்சங்கள்!

சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் இரண்டு பிரதான அச்சங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

1. பாதுகாப்பு தொடர்பான அச்சம் (கவனிக்க: சமாதான காலத்தில் பாதுகாப்புத் தொடர்பாக அதிகம் அச்சம் அடைகிறார்கள்)
2. முற்றாக புலிகளின் ஊதுகுழல்களாக அல்லது புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கொண்டு ஏனைய தரப்பினை குறிப்பாக முஸ்லிம்களை சமாதானத்தின் குழப்புனர்களாக வெளிப்படுத்தி அவர்களை தீவிரமாகப் புறக்கணிக்கின்ற தமிழ் ஊடகங்கள் தொடர்பான அச்சம். இதை "ஊடக அச்சுறுத்தல்" என அடையாளம் காண்போம்.

உதாரணத்திற்கு 02-02-2003 இன் "உதயன்" (யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரி) பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்திலிருந்து சில பந்திகள்.

"தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலான பூசல் பிரச்சினைகளுக்கு நடுவில் - மத்தியில் - புகுந்து லாபம் ஈட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் தலைமைக்கு - இப்போது தமிழரும் சிங்களவர்களும் பூசல்களை மறந்து - பிரச்சனைகளுக்கு அமைதி வழியில், சுமூகத்தீர்வுகாண - இணங்கிப் போவதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியவில்லை".

"இரு தரப்பும் தொடர்ந்து சண்டையிட்டால் இடையில் வாய்ப்பாகப் பிடுங்கிக் கொள்ளலாம் என்ற தங்களின் எதிர்பார்ப்பு அடிபட்டுப்போனதாக அவர்களுக்குக் கவலை"

"அதனால்தான் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் நகர்வுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள்".

"தமிழர் தங்கள் உரிமைகளுக்காக இரத்தம் சிந்தி பல்லாயிரக்கணக்கில் உயிர்களைத் தியாகம் செய்து, உடமைகள், சொத்துக்களை இழந்து, உயிர்ப்போராட்டம் நடத்தியபோது அவர்களுடன் சேர்ந்து தங்கள் உரிமைக்கு குரல் கொடுக்க மறந்தவர்கள்".

"தமிழரின் போராட்டத்தை நசுககும் சக்திகளுடன் கூடிக்குலாவி அற்ப சொற்ப சலுகைகளுக்காக அணிமாறி நின்றவர்கள்."

முடிந்தால் அந்தத் தலையங்கத்தை வாசித்துப்பாருங்கள். சமாதானத்தின் பின் அனேகமாய் எல்லாருமே புலிகளாய் மாறிவிட்ட தமிழர்களின் ஒவ்வொருவரின் குரலாக அச்சுறுத்தலாகத்தான் அந்த ஆசிரியத் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழின் - மன்னிக்கவும் தமிழர்களின் பிரதான நாளிதழ்களதும் (அரசாங்கத்தினதும், இந்திய வம்சாவழி முதலாளிகளதும் பணத்தில் வெளிவரும் இப்பத்திரிகைகள் எவ்வாறு யாழ் தமிழர் மேலாதிக்கத்துக்குள்ளாகின்றன என்பது புறம்பாகப் பார்க்கப்படவேண்டிய இன்னொரு விடயம்) அடிப்படை எண்ணக்கருவும் இதுதான். ஆனால் "உதயனை" முஸ்லிம்கள் வாங்குவதில்லை. ஏனையவற்றை (தினக்குரல், வீரகேசரி, முஸ்லிம்களை பத்திரிகையாளர்களாகவல்ல, வேலையாட்களாகக் கொண்ட தினகரன்) முஸ்லிம்களும் "நுகர்கிறார்கள்". உதயன் வெளிப்படையாக "அச்சுறுத்திவிடுகிறது". ஏனையவை "முஸ்லிம் நுகர்வுத் தளத்தை" தக்கவைப்பதற்காக நேரடியாக "அச்சுறுத்துவதில்லை".

மேற்சொன்ன இரண்டு அச்சுறுத்தும் விடயங்கள் முஸ்லிம் சமூக மட்டத்தில் நேரடி விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதும் அவதானிப்பிற்குரிய ஒரு விடயம். அவையாவன-

* பாதுகாப்பு தொடர்பான அச்சம் தோற்றுவிக்கும் தற்காப்பு முனைவுகள் ஒருவிடயம்
* மற்றையது, முஸ்லிம்களுக்கென்ற ஒரு பத்திரிகையின் தேவை பற்றிய அதீத புரிதல், அதற்கான முனைவுகள்
* பொதுவாக அரசியற்களத்தில் ஏற்பட்டுள்ள வெகுஜன விழிப்புணர்வு (உ-ம்: ஒலுவில் பிரகடனம்)

இவற்றில் பாதுகாப்பு தொடர்பான அச்சம் பற்றிய புரிதல்களை, பகிர்வுகளை மூதூர் பிரதேச நிகழ்வுகள் சார்ந்து விளங்கிக் கொள்ள முனைவோம். இங்கு மூதூர் உதாரண தளமாக எடுத்துக் கொள்ளப்படுவதற்குக் காரணம், சமாதான ஒப்பந்தத்தின் பின்னர், புலிகளின் பின்புலத்தோடு தமிழர் தரப்பு முஸ்லிம்களோடு மோதிக் கொண்ட முதல் இடம் மூதூர். இதன் தொடர்ச்சியாகத்தான் வாழைச்சேனை வன்முறை. (இடைக்குறிப்பு:- வாழைச்சேனை சம்பவத்தையொட்டி வெளியிடப்பட்ட சிறுபதிவு நூல் போன்று மூதூரிலும் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பது எனது ஆதங்கம்)

இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் இடைவெளிகளைத் தோற்றுவித்து, முஸ்லிம்களிடம் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தி "மாற்றுவழிகளைத்" தேடிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாற்றுவழிகள், பிரபாகரன் - ஹக்கீம் உடன்படிக்கை, அண்மைய பஷீர் சேகுதாவூத் பேச்சுவார்த்தை வரையிலாக ஒரு வகையிலும், கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் என சிங்களப் பத்திரிகையொன்று புலானய்வாக எழுதிக்காட்டியது போன்று ஒரு வகைத் தயார்நிலையிலும், (இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட ஊகமாகவும், பிரச்சினையின் திசையை மாற்றும் உத்தியாகவும் கூட இருக்கலாம்) இருப்பதாக அல்லது அணுகப்படுவதாக விளங்கலாம்.

இவற்றில், பாதுகாப்பு அச்சத்தை விலக்கி நட்புறவாக வாழ சிறந்தவழியாக புரிந்துணர்வான, பிரச்சினைகள் சரியாக இனங்காணப்பட்டதான பேச்சுவார்த்தை உடன்பாடுகளும், தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் உத்தரவாதங்களுமே அமையக்கூடும் என்பது எனதும், இயல்பானதுமான எதிர்பார்க்கையாகும்.

மேற்பார்த்த உதாரண சம்பவங்கள் இந்த எதிர்பார்க்கையைத் தவிடு பொடியாக்கினாலும் கூட இன்னமும் முன்னகர வேண்டியிருக்கிறது எங்கள் பக்க களைகளையெடுப்புக்களோடு............!

# புறக்கணிக்கப்பட்ட மன்னார் முசலிப் பிரிவின் அவல நிலை

முன்னர் ஒரு காலத்தில் விவசாயத்திற்கும், மீன்பிடிக்கும் பெயர்போன மன்னார் மாவட்டத்திலுள்ள முசலிப் பிரதேசம் தற்போது அடையாளம் காண முடியாதவாறு அழிக்கப்பட்டு காடுபிடித்த நிலையில் வனவிலங்குகளின் சரணாலயமாக காட்சி தருகிறது.



அடிப்படை வசதிகளற்ற நிலையில் முசலிப் பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்ட ஒரேயொரு குடும்பத்தையும், முசலிப் பிரிவில் தகர்க்கப்பட்ட நிலையில் காணப்படும் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தோற்றத்தையும் இப்படங்களில் காணலாம்.

சுமார் 23 முஸ்லிம் கிராமங்களையும் 3 தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கிய முசலிப் பிரதேசமானது தமிழ் முஸ்லிம் உறவுகளோடு நீண்ட வரலாற்றைக் கொண்ட செல்வச் செழிப்பு மிக்க கிராமமாக விளங்கியது. இங்கே 23 பள்ளிவாசல்களும் 27 பாட சாலைகளும் இருந்தன.

இவ்வாறான சகல வளங்களும் நிரம்பிய முசலிப்பிரதேசம் பயங்கரவாத நடவடிக்கையில் முற்றாக அழிக்கப்பட்டு தடம் தெரியாமல் காட்சியளிக்கிறது. கடந்த 1990ம் ஆண்டு பாசிசப் புலிகளின் மிரட்டல்களுக்கு அமைய ஒரு சில மணிநேரங்களுக்குள் ஆயிரக்கணக்கான வீடு வாசல்கள் கால் நடைகள் பல லட்சக்கணக்கான பெறுமதி மிக்க சொத்துக்கள் என அத்தனை உடமைகளையும் இழந்து அகதிகளாக இன்று வரைக்கும் அகதி முகாம்களிலும் பிற பகுதிகளிலும் முசலிப் பிரதேச முஸ்லிம்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது தோன்றியுள்ள சமாதானச் சூழலில் அங்கு மீண்டும் சென்று எமது இருப்பிடங்களை எமது வளங்களை பார்வையிடுகின்றபோது எவராலும் அறிந்து அடையாளம் காணமுடியாதவாறு அவை அழிக்கப்பட்டு காணப்படுகின்றன.

கட்டடத்தின் அடித்தளங்கள் கூட தோண்டப்பட்டு கற்கள், கம்பிகள் என எல்லாமே சூறையாடப்பட்டுள்ளன. தற்போது காடு பிடித்து வளர்ந்து காட்டு மிருகங்களின் சரணாலயமாக அது மாறியிருக்கிறது. யானைகள் கூட்டம் கூட்டமாக அங்கு வருகின்றன.

இந்நிலையில் அங்கு மீண்டும் சென்று மீளக்குடியமர்வது என்பது இலகுவான தொன்றல்ல. அரசாங்கம் அல்லது நிறுவனங்கள் வழங்குகின்ற குறிப்பிட்டதொரு சிறுதொகைப் பணத்தைக் கொண்டு அங்கு எவ்விதமான புனரமைப்பு வேலைகளையும் செய்துவிட முடியாது. வளர்ந்திருக்கும் காடுகளை வெட்டி துப்பரவு செய்தவற்கு கூட அப்பணம் போதுமானதாக இருக்காது.

எது எப்படியிருப்பினும் மக்கள் மீண்டும் அங்கு சென்று குடியமர்ந்து தமது காணிகளில் விவாசயம் செய்து மீண்டும் அந்த இன்பம் நிறைந்த மகிழ்சிகரமான வாழ்வை வாழ்வதற்கு பெரும் ஆவலாக உள்ளார்கள். ஆனால் இதுசம்பந்தமாக எந்த அரசியல் வாதியோ முஸ்லிம் எம்.பிக்களோ, அமைச்சர்களோ இதுவரைக்கும் அங்கு சென்று நிலமைகளை ஆராய்ந்ததாகவோ அவதானித்ததாகவோ தெரியவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது பெரும் வெறுப்புள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். வெளி நாட்டிலிருந்து வரும் தூதுவர்களையெல்லாம் அதிகாரிகளையெல்லாம் யாழ்ப்பாணம் வன்னி என்று அடுக்கடுக்காக அழைத்துச் செல்கிறார்கள். ஆனால் முஸ்லிம்களின் வாழ்விடங்களுக்கு அவர்களை அழைத்து வந்து காட்டியதாக சரித்திரமில்லை.



அழிக்கப்பட்ட ஜும்ஆப் பள்ளியின் காட்சியையும், முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் உள்ள பெரிய புள்ளச்சி பொற்கேணி முகைதீன் ஜும்ஆ பள்ளிவாயலின் தோற்றங்களையும் இங்கே காண்கின்றீர்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் கூட எவ்விதமான அபிவிருத்திப் பணிகளோ புனரமைப்புப் பணிகளோ அங்கு மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயத்தில் எந்தவொரு முஸ்லிம் எம்.பியோ அமைச்சர்களோ எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் இதுவரைக்கும் மேற்கொள்ளவேயில்லை.

எனவே இனிமேலாவது எமது மக்கள் படுகின்ற இன்னல்களை, அவதிகளை கருத்தில் கொண்டு மீண்டும் எமது மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறி நிம்மதியாக வாழ்தவற்கு முஸ்லிம் தலைவர்கள் முயற்சி செய்வார்களா?

ஆயிரமாயிரம் உளக்குமுறல்களுடன்
எஸ்.எம். கௌஸ்
பெரிய புள்ளச்சி, பொற்கேணி ,
முருங்கன்

(படங்கள்: எஸ்.ஏ.எச்.ஏ. மஜீத்)

# அன்று அதாவுல்லா சமாதானத்தின் எதிரி!
# இன்று ஹக்கீம் சமாதானத்தின் எதிரி !!

தமிழ் செய்தி ஊடகங்களின் பிரச்சாரம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் மூழ்கின்ற பிணக்குகளின் அடிப்படைக் காரணங்களை திசை திருப்பிக் காட்டுவதிலும், இவ்விரு சமூகங்களுக்குள் ஏற்படும் மோதல்களை முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் முஸ்லிம்கள் என்று சித்தரித்துக் காட்டுவதிலும் நமது நாட்டுத் தமிழ்த் தேசிய நாளிதழ்கள் முனைப்போடு செயற்பட்டு வருவது நாமறிந்ததே. இப்போக்கு மீண்டும் ஒருமுறை அண்மையில் மூதூரில் நடைபெற்ற தமிழ், முஸ்லிம் பிணக்குகளின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் இதுவொரு தொடர்கதையாக நீண்டு செல்லத்தக்கது எனும் செய்தியையும் நமக்குச் சொல்லி வைக்கின்றது.

மூதூர் இறங்குதுறைப் பகுதியில் வசிக்கும் நயீம், ஜாபீர் ஆகிய இரு முஸ்லிம் இளைஞர்கள் கடந்த 31.03.2003 இல் வியாபாரத்திற்காக விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் சென்றவர்கள் வீடுதிரும்பாமையும், அதனால் இவர்களின் ஒருவரது தாயார் நஞ்சருந்தி உயிரிழந்ததும் நன்கறிந்த நிகழ்வாக இருந்தும் கூட, இதனை கேள்விப்படுகின்ற ஒரு செய்தியாக ஊர்ஜிதப்படுத்தாத ஒரு செய்தி என்ற தோரணையை வெளிப்படுத்தும் சொற்களைக் கொண்டு செய்தி எழுதியிருந்தன நமது நாட்டு தமிழ்த் தேசிய நாளிதழ்கள்.

முஸ்லிம்கள் மீது பழி சுமத்தும் கைங்கரியத்தையும், தமிழ் மக்கள் முஸ்லிம்களினால் அச்சுறுத்தப்படுவது போன்ற தோற்றப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் எழுதுவதையும், பக்கச்சார்பான தன்மையில் நிகழ்வுகளை திரித்துக் கூறுவதையும் நமது நாட்டு தமிழ்த் தேசிய நாளிதழ்கள் ஓர் எழுதாத யாப்பாகக் கடைப்பிடித்து வருவதை நாம் அவதானிக்கலாம்.

இருவாரங்கள் கடந்தும் வீடு திரும்பாத இரு முஸ்லிம் இளைஞர்களின் ஒருவரது தாயார் இறந்த பின்னர்தான் இவ்விரு இளைஞர்களின் கடத்தல் பெரிதும் கொதிப்பு நிலைக்குள்ளானது. இதனால் இப்பகுதியில் ஏற்பட்ட அமளியை அமைதிப்படுத்துவதற்காகவே முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அனுப்பப்பட்டிருந்தனர். ஆயின், இவர்களின் வருகையின் பின்னரே கடத்தப்பட்ட இளைஞர் விவாகரம் கொதிப்பு நிலையைப் பெற்றதென்று தமிழ்த் தேசிய நாளிதழ்கள் விடயத்தை திசை திருப்புவதில் அக்கறை செலுத்தியிருப்பது முறையற்ற செயலாகும்.

தமது மார்க்கத்தில் தடுக்கப்பட்ட "தற்கொலை" நடவடிக்கையை அடுத்தே கடத்தப்பட்ட இளைஞர்கள் பற்றிய அக்கறையை நமது சமூகம் அழுத்திச் சொல்லும் விழிப்புணர்விற்கு வந்திருக்கின்றதெனில், நமது சமூகம் இன்னும் விழிப் புணர்வையோ, விடுதலைத் தாகத்தையோ பரவலாக அடையவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது. அதே நேரம் இம்மரணம் முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை சரியான உரிமை விழிப்பாக மாற்றி விட்டிருப்பதையும் நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

விடுதலைப் புலிகள் இவ்விரு இளைஞர்களையும் தாம் கடத்தவில்லை என்று கூறுவதை முழுமையாக முஸ்லிம் சமூகம் நம்ப வேண்டும் என்பதை நமது நாட்டுத் தமிழ்த் தேசிய நாளிதழ்களும், விடுதலைப் புலிகளை அண்டி அரசியல் செய்பவர்களும் அவர்களின் அடிவருடிகளும் உரத்து வலியுறுத்தியிருந்தமையை நாம் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வன்முறைகள் யாவற்றுக்கும் அவர்கள் உடனுக்குடன் உரிமை கோரி வந்தவர்கள் போலும், பொய்யே கூறாதவர்களாகவும் இருந்தது போலும் போன்ற கருத்து மயக்க நிலையிலிருந்து மூதூர் விடயத்தை வேறொரு கண்ணோட்டத்தில் நோக்குவதன் மூலமே உண்மை துலங்கும் என்ற நிலைக்கு மக்களை திருப்புவதில் தமிழ்த் தேசிய நாளிதழ்கள் தமது பங்கை நிறைவேற்றி இருந்தன.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வன்முறைகளுக்கும் உடனடியாக உரிமை கோரும் நேர்மையாளர்கள் அல்ல என்பதற்கு அமிர்தலிங்கத்தின் கொலையும், அதை அவர்கள் சுமார் இருவருடங்கள் கடந்த பின்னர் ஏற்றுக் கொண்டமையும், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையும், ஏறாவூர் காட்டுத்தர்பார்களை இதுவரை அவர்கள் ஒப்புக் கொள்ளாமையும் போன்ற நிகழ்வுகள் சில உதாரணங்களே.

இந்நிலையில் "இரண்டு வாரங்களுக்கு முன்னர் முஸ்லிம்கள் இருவர் கடத்தப்பட்டதாக அறிந்தோம். இதுவிடயத்தில் எமக்கு எந்த விதமான தொடர்பும் இல்லை" என விடுக்கும் அறிக்கையை ஏற்க வேண்டுமென விடுதலைப் புலிகள் எதிர்பார்க்குமளவிற்கு அவர்களின் கடந்த கால நடைமுறைகள் இடந்தரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"சமாதான சூழல் தோன்றிய பின்னர் கிழக்கில் முதல் முறையாக மூதூரில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை தாக்கப்பட்டதற்குப் பின்னர் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே வன்முறைச் சம்பவங்கள்" தோன்றி பரவியதென அன்றைய மூதூர் அனர்த்தத்தின் போதும், இன்றைய வன்முறையின் போதும் தமிழ்த் தேசிய நாளிதழ்கள் வாணித்திருப்பதானது, "ஒரு பொய்யை பல முறை திருப்பித்திருப்பி உரைப்பதன் மூலம் மெய்யாக இருக்குமோ என்ற இரண்டும் கெட்ட நிலைக்கு கொண்டுவரலாம்" என்பதன் உத்தியாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் இருந்தவர்களினாலேயே முஸ்லிம்கள் முதலில் தாக்கப்பட்டனர். அதன்பின்னர் தான் இப்பணிமனை விடயம் நிகழ்ந்தது. இதுபோன்றே இன்றைய மூதூர் பிரச்சினையிலும் முஸ்லிம் வாலிபர் இருவர் கடத்தப்பட்டமை, படகுகள், வீடுகள் எரிக்கப்பட்டமை, குறிப்பிட்ட சில பகுதிகளில் முஸ்லிம்கள் மீன் பிடிக்கக் கூடாது என எச்சரிக்கப்பட்டமை போன்ற அனைத்து மோதல்களுக்கான அத்திபாரங்கள் புலிகளினாலேயே முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டன என்பது தீக்கணலை ஒத்த உண்மைகளாகும்.

இத்தனை விடயங்களையும் மூடிமறைத்து அதாவது "முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைத்தல்" நிலையில் நின்று "அதாவுல்லா அணியினர் சமாதானத்தின் எதிரிகள்" என்று முன்னர் பழி சுமத்தியது போன்று "ஹக்கீம் அணியினரும் சமாதானத்தின் எதிரிகள்" என இப்போது தமிழ்த் தேசிய நாளிதழ்கள் நேடியாகவே குற்றம் சாட்டி தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றன.

பத்திரிகை தர்மங்களை குழி தோண்டிப் புதைத்து விட்டு, செய்திகளின் நம்பகத்தன்மைகளைப் புறக்கணித்து விட்டு, நமது நாட்டுத் தமிழ்த் தேசிய நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சமாதானத்தின் எதிரிகளாக விடுதலைப் புலிகள் இருக்க மாட்டார்கள் என்கின்ற ஒரே தளத்திலே நோக்கப்படுவதினால்தான் விடுதலைப் புலிகள் மட்டுமே சமாதான விரும்பிகள் போல் இப்பத்திரிகைகளுக்குத் தெரிகின்றன.

தாக்க ரீதியாக நோக்கின், விடுதலைப் புலிகளுக்கு இந்த சமாதான நகர்வில் பல்வேறு நம்பிக்கையீனங்கள் இருந்து வருகின்றன. இதனால் யுத்த நிறுத்தத்தையும், சமாதான பேச்சுவார்த்தையையும் நாம் முதலில் மீறியவர்கள் என்ற பழிவந்து விடாத நிலையில் முறிவடையச் செய்வதற்கு ஏதாவது காய்களை நகர்த்தும் நடவடிக்கையில் இறங்கவேண்டிய தேவை புலிகளுக்கு உள்ளது என்கின்ற நியாயமான சந்தேகத்தையும் இங்கு எழுப்ப முடியும்.

*எம்.எச்.எம். ஹலீம்,*
*மாளிகைக்காடு*

## எம் சகோதரி பாத்திமாவுக்கு நேர்ந்தது என்ன?

ஜிப்ரிக்கு அவள் சவூதியிலுள்ள முகவர் நிலையத்தின் ஊடாக 6 மாதகாலத்துக்கு எகிப்துக்கு அனுப்பப் பட்டுள்ள விடயம் தெரியவந்தது. குழப்பமடைத்த சகோதரனை சமாதானப்படுத்த பாத்திமாவுக்கு சகல வசதிகளும் சிறந்த சம்பளமும் கிடைக்கும் என முகவர் கூறினார்.

ஏதாவது தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த குடும்பத்தினருக்கு பாத்திமா பற்றிய தகவல்கள் கிடைக்காததையடுத்து மீண்டும் அவர்கள் முகவரிடம் சென்று முறையிட்டனர். அவர், "புது இடம், தகவல்கள் வந்து சேர சில மாதங்கள் ஆகலாம்" என்று கூறி பாத்திமாவின் குடும்பத்தைச் சமாளித்தார் முகவர். இவ்வாறிருக்க திடீரென ஒரு கடிதம் பாத்திமாவிடம் இருந்து வந்ததைக் கண்ட குடும்பத்தினர் மகிழ்ச்சியில் திளைத்த சில நிமிடங்களிலேயே அவர்களுக்கு பேரதிர்ச்சியும் காத்திருந்தது.

"நானா... என்னை, காப்பாற்றுங்கள். நான் தொழில் பார்க்கும் வீட்டின் உரிமையாளரும், அவரின் புதல்வர்களும் என்னை தொந்தரவு செய்கிறார்கள். இந்தக் கடிதத்தை நான் யாரும் அறியாதவாறே எழுதுகிறேன். என்னை ஒவ்வொரு நாளும் அடிக்கிறார்கள். சாப்பாடு தருவதில்லை. ஆகவே என்னை எப்படியாவது முகவர் நிலையத்துடன் தொடர்பு கொண்டு இலங்கைக்கு வர வழையுங்கள். என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.



இப்போது பாத்திமாவின் பரிதாப நிலை

கவலைப்பட்ட குடும்பத்தினர் முகவர் நிலையத்தில் முறையிட்ட போது பயப்படத்தேவையில்லை. அவர் தொடர்பாக நாம் தேடிப்பார்க்கிறோம் என்று கூறி கடிதத்தையும் அவர்களுடன் வைத்துக் கொண்டனர். பிறகு 50 தடவைகளுக்கும் மேல் தகவல் பெறச் சென்ற போதெல்லாம் குடும்பத்தவரைச் சந்திக்காது முகவர் ஒழித்துத் திரிந்தார். தற்செயலாக சந்தித்த முகவர் பாத்திமா எகிப்திலுள்ள குழுவோடு லண்டன் போய் விட்டார், சவூதி போய்விட்டார், குவைட் போய்விட்டார் என மாற்றமான தகவல்களைக் கூறினார். இறுதியாக பாத்திமா தான் வேலை செய்த வீட்டிலிருந்து தப்பி ஓடி விட்டதாக முகவர் நிலையத்தினர் அறிவித்தனர்.

இறுதியாக ஜிப்ரி முகவர் நிலைய உரிமையாளர்களின் காலில் விழுந்து மன்றாடி எப்படியாவது தங்கையை காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினார். பாத்திமாவின் கவலையால் தாய் நோயுற்றுமிருந்தார். முகவர்கள் மூலம் இனி எத்தகைய பயனும் கிட்டப் போவதில்லை என உணர்ந்த ஜிப்ரி இறுதியாக இலங்கையின் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியக காரியாலயத்தில் முறையிடச் சென்றார். அங்கு பாத்திமாவை வெளிநாடு அனுப்பியிருப்பது சட்டவிரோத நடவடிக்கை மூலம் என அறிவிக்கப்பட்டது. எகிப்தில் இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்பு இல்லையெனவும் முகவர் நிலையம் ஏதாவது இரகசிய சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் அனுப்பியிருக்கலாம் எனவும் ஜிப்ரிக்கு அறிவிக்கப்பட்டது. என்றாலும் வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் [illegible] தகவல்கள் பெறவும் அவ்வதிகாரிகள் தவறவில்லை.

பாத்திமா இருகைகளும் ஒருகாலும் உடைக்கப்பட்டு தலையில் பலமான காயம் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது. இறுதியாக 20.03.2003 பாத்திமா இலங்கைக்கு கொண்டுவரப் பட்டாள். ஆரோக்கியமான உடல், மன நிலையுடன் சென்றவள் 2 வருடம் 3 மாதங்களின் பின்னர் உணர்வற்ற ஜடமாய் கொண்டு வரப்பட்டாள். பிறகு அம்பியூலன்ஸ் வண்டி மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 ஒபரேஷன்களின் பின்னர் அவளின் உயிரை வைத்தியர்கள் பாது காத்தனர். 20 வயது யுவதி 60 வயது கிழவியாக மாறிவிட்டாள், வாயில் உள்ள 7 பற்கள் உடைக்கப்பட்ட நிலையிலும் முதுகெலும்பு காயப்பட்ட நிலையிலும் உறங்க முடியாதவாறும் அவஸ்தைப் படும் காட்சி காண்போரை கண்ணீர் வடிக்கச் செய்யும்.

பாத்திமா அதிர்ச்சியின் காரணமாக நடந்தவற்றை கூறமுடியாதவாறு தவித்துக் கொண்டிருக்கிறாள்.

தனது சகோதரியின் உடலங்கமொன்று எகிப்தில் வெட்டி எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தான் சந்தேகிப்பதாகவும் அவரது சகோதரர் ஜிப்ரி குறிப்பிடுகிறார்.

தமிழில் : ஷிராஸ்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமக்கான தொடர்பூடகங்கள்!

## முஸ்லிம் நெஞ்சமொன்றின் உணர்வுகளும் உள்ளக் குமுறல்களும் எதிர்பார்ப்புகளும்

முஸ்லிம் குரல் பத்திரிகையின் அனைத்து சுவடுகளையும் வாசித்தவன் எனும் ரீதியில் பத்திரிகையின் வளர்ச்சிக்காகவும், நமது முஸ்லிம் சமுதாயத்தின் நலனுக்காகவும் எனது மனதில் எழுந்த சில கருத்துக்களை பத்திரிகை ஆசிரியர் குழுவுடனும் ஏனைய வாசக நெஞ்சங்களுடனும் பத்திரிகை மூலம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை தங்களது பத்திரிகையில் வெளிவந்த ஆக்கங்கள் அனைத்தும் காலத்தின் தேவைகளைப் பிரதிபலிப்பதாகவும், சமுதாய சாக்கடைகளுக்கு சாட்டையடி கொடுப்பனவாகவும், பசுத்தோல் போர்த்திய அரசியல் புலிகளுக்கு மரண அடியாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடும் களமாகவும் இருப்பது கண்டு மன நிறைவு கொள்கின்றேன். தமிழ், சிங்கள பேரினவாதிகள் தங்களது கோரக்கரங்களைக் கொண்டு எம்மினத்தின் குரல்வளையை நசுக்குவதால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் இத்தருணத்திலாவது தமது சமுதாயத்தின் மரண ஓலம் "முஸ்லிம் குரலாக" ஓங்கி ஒலிக்கத் தொடங்கி இருப்பது நமது சமூகத்திற்கு கிடைத்துள்ள நல்லதும், இறுதியுமான சந்தர்ப்பமாகும்.

நாம் நமது தலைமைகளாலும், அரசியல்வாதிகளாலும் ஏமாற்றப்படுகின்றமையையும், நமது சமூகத்திற்கு அந்நிய சமூகங்களால் இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், கொடுமைகளையும் அனைத்து முஸ்லிம் சமூகமும் அறிந்து கொள்ளச் செய்யவும், இலங்கையின் ஒவ்வொரு மூலையிலும் நமது சமூகம் சந்திக்கின்ற சவால்களையும், நாம் முகங்கொடுக்கின்ற இன்னல்களையும், நாம் செய்கின்ற நல்லவைகளை வெளிக்கொணர்வதற்கும் நமக்கென்று ஒரு தேசிய நாளிதழ் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாததாகும். நமது சமூகத்தை அரசியல் அதிகாரத்தில் தூக்கிநிறுத்த ஒரு தனிக் கட்சியின் அவசியம் எவ்வாறு உரைக்கப்பட்டதோ, அதேபோல்தான் இதுவும். இலங்கையெங்கும் ஆங்காங்கே நடைபெறுகின்ற சிறு சிறு சம்பவங்களால் நமது சமூகம் மிகப்பாரிய பொருளாதார இழப்பினையும், உயிர் இழப்புகளை அடைவதும் வழக்கமாகியுள்ளது. இதுபோன்ற நேரங்களில் ஒரு தேசிய நாளிதழின் மூலம் அப்பிரச்சினையின் மூலத்தை மற்றவர்களுக்கு தெளிவுபடுத்துவதுடன், பிரச்சினையில் சம்பந்தப்படும் நம் சமூகத்தரப்பினருக்கு அறிவுரைகளையும் கூறி இருட்டடிப்புக்களில் இருந்து நமது சமூகத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்றும் நம்புகின்றேன். மேலும் நமக்கென்று ஒரு தேசிய நாளிதழ் இருக்குமானால் நமக்கென்று ஒரு தெளி வான கொள்கையையும், அரசியல் வழிமுறையையும் அமைத்து, அதனடிப்படையில் சமூகத்தை ஒன்று திரட்டி தெளிவாக முன்னேற வழிசமைக்க முடியும்.

நமக்குள் மாகாண, மாவட்ட, பிராந்திய வேறுபாடுகள், போட்டிகள் தலைதூக்காமல் தடுத்துக் கொள்ளவும், நமது சமூகம் முன்னேறக் கூடிய தொழில் துறைகளை அடையாளம் கண்டு வழிநடாத்தவும் முடியும். மேலும், நமது சமூகத்தைப் பற்றிய தெளிவின்மையால் பல பிரதேசங்களில் அந்நிய சமூகத்தினர் நம்மை ஆக்கிரமிப்பாளர்களாகவும், பொருளாதாரங்களைச் சுரண்ட வந்தவர்களாகவும், தீவிரவாதிகளாகவும் அடையாளப்படுத்தி நம்மீது சந்தேகம் கொள்கின்றனர். இதனை இனவாதிகள் தூண்டிவிட்டு நம்மையும், நமது பொருளாதாரத்தையும் அழிக்கின்றனர். எனவே, நமது சமூகம் மார்க்கம், அரசியல், பொருளாதாரம் என்பவற்றில் நமது கொள்கை என்ன என்பதை நமது தேசிய பத்திரிகைகள் மூலம் அவர்களுக்குப் புரியவைப்பதால் பாரிய அழிவுகளில் இருந்து நமது சமூகத்தைக் காத்துக் கொள்ள முடியும் என நம்புகின்றேன்.

நமது புத்திஜீவிகள் மற்றவர்கள் மீது தெரிவிக்கும் ஒரு குற்றச் சாட்டு நமது சமூகம் பற்றிய இதுவரை நமது சமூகத்திற்கு நடந்த அநீதிகள், இழப்புகள் பற்றிய நமது பாரம்பரியங்கள், கலாசாரங்கள் பற்றிய ஆவணத் தொகுப்புகள் எதுவும் கிடையாது என்பதாகும். இதற்கு முக்கிய பிரச்சினை இதை யார் செய்வது, எங்கிருந்து பெறுவது என்பதாகும். இதைக்கூட நமக்கென்று ஒரு தேசிய நாளிதழ் இருக்குமானால் அவ்வப்பகுதியில் இருக்கும் புத்திஜீவிகள் தங்களது பகுதி தகவல்களையும், தரவுகளையும், எழுதத் தேவையானவர்கள் எங்கிருந்தாலும் அவற்றைச் சேகரித்து ஆவணப்படுத்தலாம். இது நடைபெறா விட்டால் நமது நாளைய சமுதாயம் தடம் மாறி, கலாசாரம், தனித்துவம் இழந்து மார்க்கத்தையும் மறந்துவிடும். இதேநிலை தொடருமானால் "இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு காலத்தில் வாழ்ந்தார்கள்" என்றுதான் சரித்திரம் எழுதும்.

இன்று தமிழ் சமுதாயம் இவ்வளவு தூரம் தலை நிமிர்ந்து நிற்கவும், ஆயுதப் போராட்டம் அனைத்துத் தமிழர்களாலும் போற்றிப் புகழப்படுவதற்கும் காரணம் என்ன? அவர்களது அஹிம்சை வழிப்போராட்டம் தொடக்கம் ஆயுதப் போராட்டம் வரை ஒவ்வொருபடியும் அக்குவேறு ஆணிவேறாக மக்கள் மயப்படுத்தப்பட இவர்களுக்கு பத்திரிகை இருக்கிறது. ஓரிரு தமிழ்ப் பத்திரிகைகள்தான் வெளிவந்தாலும் அனைத்தும் சமூகப் பிரச்சினைகள், அரசியல், கல்வி, சமுதாய மறுமலர்ச்சிக்கான ஆக்கங்களைத் தாங்கி வந்து பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்தின. அனைத்து மக்களையும் அதன்பால் ஈர்க்கச் செய்தன. அதனால் அனைவரும் பிரச்சினையை ஒரே கோணத்தில் தெரிந்து கொண்டார்கள். வெளிநாடுகளுக்கும் பரப்பினர். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கூட பல தமிழ்ப் பத்திரிகைகளை ஆரம்பித்துக் கொண்டனர்.

இதுவரைகாலமும் பத்திரிகைகள் ஆற்றி வந்த தொண்டினை இப்போது தனியாக தொலைக்காட்சிகளும், வானொலிகளும் புதிய புதிய கோணங்களில் பலபடி உயர்த்தி புதிய உத்வேகத்துடன் செய்து வருகின்றன. (ஆரம்ப நாட்களில் ஹர்த்தால் போடுவதானால் புலிகள் விளம்பரங்கள் ஒட்டி, துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து, இரவிலே குண்டுகளை வெடிக்கச் செய்ய வேண்டும். ஆனால், இன்று ஹர்த்தால் போடுவதானால் முதலில் பத்திரிகைகள் செய்தியை வெளியிடும். அதை கண்ணோட்டம் எனக் கூறி தொலைக்காட்டியும் வானொலியும் கூறும்) இலத்திரனியல் வெகுஜனப் பிரச்சாரத்தில் அவர்கள் இமாலயத்தின் உச்சியில் நிற்கின்றார்கள். நாம் ஒரு தேசியப் பத்திரிகையை ஆரம்பிக்கவே போராட, வேண்டி நிற்கின்றோம். இலத்திரனியலைத் தொடுவது எப்போது?

இத்தனைகாலமும் எமக்கென ஒரு தேசியப் பத்திரிகை இல்லையே என ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த என்போன்றோர் இவ்வார இதழை ஒரு நாளிதழாகவே பார்ப்பர் என்பதில் ஐயமில்லை. இதுவரை நம்மிடையே எத்தனையோ வார, மாதப் பத்திரிகைகள் புற்றீசல் போல் வெளிவருவதும் வந்த வேகத்திலேயே மறைவதும் சகஜம். (அரிதாகவே சில நிலைத்து நிற்கின்றன) இதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால், ஜீவாதாரமான பொருளாதாரமின்மை, நிலையான கொள்கையில்லை. நடுநிலையாக செயற்பட முடியாமை, சமூகத்தைப் பற்றிய சீரிய சிந்தனை இன்மை, தனக்குப் பிடிக்காதவர்களைப் பழிவாங்குதல் என்பனவாகத்தான் இருந்தன.

இதுவரையும் முஸ்லிம் குரல் காத்துவந்த உண்மைத்தன்மையும் சமூகப் பற்றும் தைரியமும் இறுதிவரை தொடர வேண்டும். அடக்குமுறைகளுக்குப் பயந்து விடக்கூடாது. மென்மேலும் பக்கங்களை அதிகரித்து ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள் போல் உலகச் செய்திகளையும், ஏனைய சமூகங்களின் செய்திகளையும் தாங்கி இப்பத்திரிகை ஒரு முறைமையான பத்திரிகையாக வரவேண்டும்.

இன்று வெளிவருகின்ற அரச நாளிதழிலே முக்கியமான பொறுப்புக்களில் நம்மவர்கள் இருக்கின்றனர் என்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டு இருந்தாலும் அவர்களால் உண்மைகளைக் கூட சில சமயங்களில் தமது பத்திரிகைகளில் பிரசுரிக்க முடியாத நிலையிலும் தமக்கெதிரான பொய்ப் பிரசாரங்களைத் தடுக்க முடியாத கையாலாகாத நிலையிலுமே இருக்கின்றனர் என்பதனை கடந்த மூதூர் கலவரம் தெளிவுபடுத்தியது. அன்றைய தினம் லேக் ஹவுஸ் முஸ்லிம் பத்திரிகையாளர் குழாம் களத்தில் இருந்தும், சம்பவங்களைக் கண்கூடாக கண்டிருந்தும் உண்மைச் சம்பவங்களை உடனுக்குடன் வெளியிட முடியாது போனது ஒருபுறம் இருக்க, வதந்திகளாக நம்மீது வந்த குற்றச்சாட்டுக்களையாவது மறுதலிக்க முடியாது போய்விட்டதே. வீரகேசரியிலும், தினக்குரலிலும் எமக்கு எதிரான செய்திகள்தானே வெளிவந்தன. நமக்கென்று நாளிதழ் ஒன்று இருந்திருந்தால் உண்மையை உடனேயே நாடு முழுவதும் தெரியப்படுத்தி நம்மவர்களை சீராக வழிநடத்தி இருக்கலாமே. முஸ்லிம்களுக்கு உண்மையைச் சொல்வதற்கோ அல்லது பொய்யை மறுப்பதற்கோ ஒரு ஊடகம் இல்லை என்ற தைரியத்தில் அவர்களது கொள்கைகளை எம்மீது திணிப்பதும், கற்பனையில் வரும் வாறெல்லாம் எம்மைப் பற்றி எழுதுவதும், அதையே வேறு வழியின்றி நாம் வாங்கிப் படிப்பதும் சகஜ மாகி விட்டதே?

இம்மடலினூடே நம் சமூக வாசக நெஞ்சங்களுக்கும், தனவந்தர்களுக்கும் ஒரு பணிவான வேண்டுகோள் கடந்த காலங்களில் தனியார், அரச தமிழ் பத்திரிகைகள் எமக்கு எதிராக எழுதுவதும், சமூகப் பற்றுள்ள பெரியார்களும், உலமாக்களும் அவ்வப்போது அப்பத்திரிகைகளை பகிஷ்கரிக்க வேண்டுகோள் விடுப்பதும் நாம் அதனை எரிப்பதும் மறுநாளே அப்பத்திரிகையை வாங்கிப்படிப்பதும் வழக்கமாகி விட்ட ஒன்றாகும். இதற்குக் காரணம் மாற்றீடாக ஒரு தேசிய நாளிதழ் இல்லையென்பதே ஆகும். இந்நிலை கட்டாயம் மாற்றப்பட வேண்டும். முஸ்லிம் குரல் தேசிய நாளிதழாக வெளிவரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வாசகர்களே இனியாவது மனம் மாறுங்கள். எம் சமூகத்தைக் குழிதோண்டிப் புதைக்க முயற்சிக்கின்ற பத்திரிகைகளை நிரந்தரமாக பகிஷ்கரியுங்கள். முஸ்லிம் குரலை சொந்தப் பணத்தைக் கொடுத்து வாங்கிப் படியுங்கள். இரவல் வாங்கிப் படிப்பதால் நீங்கள் செய்தி களைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், நம் பத்திரிகை வளர்வது சாத்தியமற்று செத்து மடிந்துவிடும்.

வர்த்தகர்களே! உங்களது பொருட்களை, தயாரிப்புக்களை, தேவைகளை தகவல்களை முஸ்லிம் குரலிலே விளம்பரம் செய்யுங்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதோடு இப்பத்திரிகைக்கும் உயிர்ப்பிச்சை போடுங்கள். நமது சமூகத்தின் குரலை உரத்து சத்தமிட உரம் போடுங்கள். உங்களால் ஆன அனைத்து வழிகளிலும் இப்பத்திரிகையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துங்கள். எமது சமூகத்தின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யுங்கள்.

ஆசிரியர் அவர்களே! இப்பத்திரிகையில் எப்போதும் உண்மையே வெளிவர வேண்டும். பிராந்திய செய்திகளை நம்பத் தகுந்தவர்களைத் தொடர்பு கொண்டு உண்மைத் தன்மையைத் தெரிந்து கொண்ட பின்னர் தான் வெளியிடல் வேண்டும். அப்படி வரும் போது தவறுகளும், தவறு செய்த வர்களும் சமூகத்திற்கு காட்டிக் கொடுக் கப்படலாம். இதனால் அவர்களுக்கு ஏற் படும் கோபங்களின் வடிகாலாக ஆசிரியர் கள் தாக்கப்படலாம். அலுவலகம் எரிக்கப்படலாம். இத்தகைய ஈனச் செயல்களை சமூக விரோதிகள்தான் செய்வார்கள். இவர்களிடம் இருந்து நேர்மையான முறையான பதில்களை எதிர்பார்ப்பது கடினம். இவர்களையெல்லாம் மக்கள்தான் அடையாளம் கண்டு சமூகத்தை விட்டு ஒதுக்கியாக வேண்டும்.

நம் சமுதாய தொழில் அதிபர்களே!

இன்று வருமானம் கூடிய ஒரு துறையாக தகவல் தொழில்நுட்பம் இருக்கிறது. நம் மார்க்கம் கூட்டு முதலீட்டு வர்த்தகங்களையே மிகவும் ஊக்குவிக்கின்றது. எனவே, நீங்கள் ஒரு குழுவாக சேர்ந்து இலத்திரனியல் அதாவது முஸ்லிம் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை ஆரம்பிக்க முன்வர வேண்டும். அதனூடாக எமது சமூகத்தை வழிநடாத்த முன்வர வேண்டும். தொழில் அதிபர்களை இணைத்து ஒரு குழுவாக மற்றும் வேலையை முஸ்லிம் குரல் செய்ய வேண்டும். இன்றைய காலகட்டத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து முன்னேறும் அளவிற்கு நம் சமூகம் மாற்றமடையவில்லையானால் கூர்ப்புக் கொள்கையான "தக்கன பிழைத்தலும் அல்லன மடிதலும்" எனும் தத்துவப்படி நம் சமூகம் செத்து மடிவதை தடுக்க முடியாது போகலாம்.

*அ.ஐ.அனீஸ் அகமட்*
*காத்தான்குடி*

# மூதூர் டயரி

**31.03.2003**

நஹீம், ஜாபீர் என்கிற இரு முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வியாபார நோக்கமாகச் சென்று காணாமல் போகிறார்கள்.

**05.04.2003**

தோப்பூரைச் சேர்ந்த மூவர் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**10.04.2003**

தோப்பூர் பதற்றமடைகிறது. 5 ஆம் திகதி முஸ்லிம்களை தாக்கியவர்கள் தாக்கப்படுகிறார்கள். தமிழர் தரப்பு மாஸூக் என்பவரைக் கடத்துகிறது. தோப்பூர் முஸ்லிம்கள் பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த ஆறு தமிழர்களை தடுத்து வைக்கிறார்கள். பல்வேறு தரப்புகளின் தலையீட்டால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலையாகி நிலைமை சுமூகமடைகிறது. இதே தினம் மூதூர் வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றும் 58 ஐச் சேர்ந்த ஜாபீர் என்ற இன்னொருவர் காணாமல் போய், மறுநாள் பலத்த தாக்குதல் காயங்களுடன் மல்லிகைத் தீவில் வைத்து விடுதலை செய்யப்படுகிறார்.

(இவற்றிற்கிடையில் மார்ச் 31 ஆம் திகதி காணாமல் போனவர்கள் தொடர்பான நிறுவன, குடும்ப ரீதியான தேடுதல்கள் தொடர்கின்றன. பொலிஸார் ஆட்கள் இருப்பது பற்றிய தகவல்களைச் சொல்கின்றனர். குடும்பத்தாரும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வருவோர் மூலம் தகவல்களைப் பெறுகின்றனர்.)

**11.04.2003**

கண்காணிப்புக் குழு மூதூரில் கூடுகிறது. கொழும்பிலிருந்து "கண்காணிக்கும்" அக்பர் நானா கோபமடைந்த ஊர் வாசிகளால் அவமானப்படுத்தப்படுகிறார். (இந்த அவமானம் அவருக்கு மட்டுமல்ல, அவரைப் பிரேரித்தவர்கள், அவரை நியமித்தவர்கள், முகஸ்துதி காரணமாயும், அவரின் அந்தஸ்து காரணமாயும் அவரின் இயங்காத் தன்மையை கேள்விக்குள்ளாக்காதவர்கள், இவ்வளவு நடந்தும் அவரை தங்களது கட்சி அரசியலுக்காக இராஜினமாச் செய்யக் கோராதவர்கள் என பலருக்கு இந்த அவமானம் சாரும்) கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் "தாங்கள் சம்பந்தப்படவில்லை" என்ற தகவலைத் தெரியப்படுத்துகிறது.

**13.04.2003**

காணாமல் போன - கடத்தப்பட்ட ஜாபீர் என்பவரின் தாயார் (கியாத்தும்மா) மன வேதனையால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்.

**15.04.2003**

- அதிகாலை 4.30 மணியளவில் இவர் மரணமாகிறார்.

- மரணச் சடங்கு மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்காக அமைச்சர் ஹக்கீம், மு.கா. எம்பிக்கள், ஐ.தே.க. எம்.பிக்கள் மூவர், பொலிஸ் மா.அதிபர், கண்காணிப்புக் குழுத்தலைவர் விஷேட விஜயம் செய்கின்றனர்.

-ளுஹர் தொழுகையைத் தொடர்ந்து மரணச் சடங்கு நடைபெறுகிறது.

- தொடர்ந்து அக்கரைச்சேனை பள்ளிவாசலில் கூட்டம் நடைபெறுகிறது. கட்சிப் பிரச்சினை உருவாகி மையப் பிரச்சினை திசை திரும்புகிறது. ஐ.தே.க. எம்பி மஹ்ரூப் தாக்குதலுக்குள்ளாகிறார். மு.கா.எம்பிக்கள் தவிரவுள்ள அனைவரும் புறப்படுகின்றனர்.

- இஷாவுக்குப் பின்னர் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

- சக்தி, எம்.ரிவியில் ஹக்கீமின் தொலைபேசி உரையாடல் இடம்பெறுகிறது. ஹக்கீமின் பள்ளிவாசல் பேச்சையும், தொலைக்காட்சி பேட்டியையும் பார்த்தவர்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களால் விரக்தியடைகிறார்கள். மையப் பிரச்சினை நழுவுவதையிட்டு கவலையடைகிறார்கள். பொறுத்திருக்கிறார்கள்.

- இதற்கிடையில் பிரதமருடன் ஹக்கீம் உரையாடுகிறார்.

- மு.கா உயிர்பீடத்தினருக்கு அவசர அழைப்புக்கள் போகின்றன. சில உள்ளூர் பிரமுகர்களுடன் கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றன.

- தாஹா நகரைச் சேர்ந்த மன்னார் வாசியான தமிழர் ஒருவர் 14 ஆம் திகதி முதல் காணாமல் போயிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்படுகிறது.

**16.04.2003**

- தோப்பூரில் மதியநேரப் பொதுக்கூட்டமொன்று நடைபெறுகிறது.

- மாலையில் மூதூரில் "ரஃபீக் Chairman" ன் வீட்டில் மு.கா. அரசியல் அதியுயர்பீடம் கூடுகிறது. ரணில் வந்து தீர்வு சொல்ல வேண்டுமென கட்சிசார் பிரச்சினை மேலோங்கி முடிவெடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. காணாமல் போனோர் பிரச்சினைக்கு தீர்வு காணாத ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் குழுவொன்றமைத்து செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

- இரவு நத்வதுல் உலமா கல்லூரியில் "அழைக்கப்பட்டவர்களுடனான" கலந்துரையாடல் நடைபெறுகிறது.

- காணாமல் போன தமிழர் வீடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

**17.04.2003**

பிரச்சினை திசைமாறுவதை மக்கள் உணர்கிறார்கள். அரசியல்வாதிகளின் காய்நகர்த்தல்கள் எப்படியிருப்பினும், தாம், காணாமல் போனோர் பற்றிய முடிவு கிடைக்கும் வரை கடைகள், அலுவலகங்களை மூடியும் ஆதரவு தெரிவிக்கிறார்கள். மூதூர் முஸ்லிம்களை அரசியல் பகடைக்காய் ஆக்குவதை எதிர்த்து ஆங்காங்கே எதிர்ப்புகள் வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

மூதூரிலிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள பாலத் தோப்பூர் என்கிற முஸ்லிம் கிராமத்தில் பதற்ற நிலை ஏற்படுகின்றது. முஸ்லிம் இளைஞர்கள் சிலர் மூதூருக்கு வரும் வழியிலுள்ள தமிழ் பகுதியில் வைத்து தடுக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள். பின்னர் மாலை 5.30 மணி அளவில் பாலத் தோப்பூர் கிராமம் தமிழர்களின் (புலிகளின்) இரு முனைத்தாக்குதலுக்குள்ளாகின்றது. ஒரு முஸ்லிம் மரணமாகின்றார். (முஹம்மத் தீன் 30) பலர் காயமடைகின்றார்கள்.

-இதையடுத்து மூதூரும் பதற்றமடைகின்றது.

-இரவு, முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழு மூதூரில் நிலை கொண்டிருக்கையிலேயே, மூதூர் இறங்குதுறையை ஒட்டிய மீனவ கிராமம் புலிகளால் கடல் வழியால் உள்நுழைந்து - தீக்கிரையாக்கப்படுகின்றது. படகுகளும் எடுத்துச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்படுகின்றன.

இரவோடிரவாக மூதூர் முஸ்லிம்கள் பாதுகாப்பான இடம்தேடி தஞ்சமடைகிறார்கள். தமிழ் மக்களும் பயத்தால் தேவாலயத்தில் தஞ்சமடைகின்றார்கள்.

பொலிஸ் மா அதிபர் BBCல் நழுவல் பேட்டி கொடுக்கின்றார். முஸ்லிம் தமிழ் குழுக்களுக்கிடையிலான மோதலாக வேறொரு உருவம் கொடுக்கிறார். ஆலிம் சேனை கிராமத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 24 வீடுகள் தீக்கிரையாக்கப்படுகின்றன.

**18.04.2003**

தீவிரமடையும் நிலையை கட்டுக்குள் கொண்டுவர உயர்மட்டப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கட்டை பறிச்சான் GPS இராணுவ முகாமில் நடைபெறுகின்றது. மு.கா. குழு, திலக்மாரப்பன கூட்டணி எம்.பிக்கள் இருவர், பொலிஸ் மா அதிபர், கண்காணிப்புக் குழுவினர், தேசிய சர்வதேசிய ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொள்கின்றனர்.

- கூட்டம் நடைபெறுகையிலேயே ஆயுதம் தரித்த ஏராளமான புலிகள் கட்டுப்பாட்டுப்பிரதேச தமிழர்கள், தாக்குதல் கருவி [illegible]னர். (கவனிக்க : அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தினம்) இந்த "வெகுஜன ஆயுத அரசியலை" எல்லோரும் கண்ணுறுகின்றனர். (கவனிக்க வேண்டியது என்னவென்றால் தமிழர்கள் புலிகளின் பல்வேறு கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வந்து இங்கு கூடியிருந்தார்கள்.)

-இந்தக் கலவர நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தின் துப்பாக்கி, கிரனைட் தாக்குதலில் இரு தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். இது முஸ்லிம்களின் வேலையென்று புலிகளால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

-பொலிஸ் மா அதிபரின் நேற்றைய மழுப்பல் பேட்டியை முஸ்லிம் வாலிபர் ஒருவர் பகிரங்கமாக அனைவர் முன்னிலையிலும் விமர்சிக்கிறார். இதே போன்றதொரு வாயடைப்பு விமர்சனம் சம்பந்தனுக்கும் செய்யப்படுகின்றது.

-இக்கூட்டத்தில் பிரமுகர்களை அழைத்து வந்த ஹெலிகொப்டர் தரையிறங்குகையில் ஏற்பட்ட பெரும் சத்தத்தினால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பெருந்தொகையான கால் நடைகள் தமிழர் பகுதிக்குள் ஓடுகின்றன. பின்னர் இவை



தமிழர்களால் சாய்த்துச் செல்லப்பட்டதாக அறிய முடிகிறது.

-இதே தினம் இறால்குழியை அண்டிய பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்களின் கால் நடைகள் கொண்டு செல்லப்படுகின்றன.

-இன்று பகல் நடந்த கூட்டம் தொடர்பான செவ்விகளை, ரவூப் ஹக்கீம், சம்பந்தன், S.L.M.M தலைவர் ஆகியோர் BBC ற்கு வழங்குகின்றார். சம்பந்தன் புலி அபிமானம் காட்டி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார்.

-இரவு 9.15 அளவில் கைரியா நகர் கிராமம் தாக்கப்படுகிறது. 73 வீடுகள் அளவில் சேதமுற்றதாக பிரதேச செயலக அறிக்கை தெரிவிக்கிறது. பாலை நகரில் 13 வீடுகளும், படகுகளும் சேதமாக்கப்படுகின்றன. கைரியா நகரைச் சேர்ந்த 20 படகுகளும் இறால் குழியில் வைத்து தீக்கிரையாக்கப்படுகின்றன.

**19.04.2003**

-கைரியா நகர் சேதங்கள் பொலிஸார், இராணுவத்தினர், மற்றும் கிராம சேவகரினால் கண்காணிப்புக்குள்ளாகிறது.

மூதூர் இறங்குதுறையில் ஏராளமான முஸ்லிம் பயணிகள் காத்திருக்க, பாதுகாப்பாக பஸ்ஸில் வந்திறங்கிய தமிழ் பயணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதையிட்டு சர்ச்சைகள், வாக்குவாதங்கள் இடம் பெற்று தீர்வாகிறது. குறித்த எண்ணிக்கையான இருதரப்பு பயணிகளும் திருமலை செல்கிறார்கள்.

**20.04.2003**

-குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை. பாதுகாப்பிற்கு பெருமளவிலான இராணுவத்தார் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

-புலிகள் SLMM ஊடாக ஓர் சமாதானக் கூட்டத்திற்கு மூதூர் முஸ்லிம் முக்கியஸ்தர்களை சம்பூருக்கு அழைக்கிறார்கள். புலிகள் அழைக்கும் பிரதேசத்திற்கல்ல, திருமலை SLMM ல் சந்திக்க விரும்புவதாக "மஷூரா" எடுக்கப்பட்டு தெரிவிக்கப்படுகிறது.

-மாலை 3.30 போல் ஷாபி நகர் ஆற்றுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சலீம் என்கிற வாலிபர் சுடப்பட்டு திருமலை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.

-BBC திருமலை நிருபர் "சமாதானத்தை முஸ்லிம்கள் நிராகரிக்கிறார்கள்" என்று புலிகள் அறிக்கை விட்டிருப்பதாகக் கூறி புலிப்பக்கச்சார்பு வக்காலத்து வாங்குகிறார்.

**21.04.2003 (பகல் 1 மணிவரை)**

-திட்டமிடப்பட்டபடி உயர்தரப் பரீட்சை மூதூரிலும் பலத்த பாதுகாப்புடன் நடைபெறுகிறது.

-நேற்று சூட்டுக்குள்ளானவர் இன்று இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தோப்பூர் அல்லைநகர் பகுதியில் நண்பகல் 1.30 மணியளவில் சதகத்துல்லா நிசாலி சுடப்பட்டு மரணமடைகிறார்.

**22.04.2003**

தோப்பூர் செல்வ நகர் பகுதியில் குளம் ஒன்றில் குளிக்கச் சென்ற மீராலெப்பை (வயது 50) கழுத்து வேறாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார்.

நாகூர் சகிலா (வயது 22) துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்.

*-ஊர்சுற்றி.*

### முஸ்லிம் குரலின் பணி தூய்மையானது

நான் "முஸ்லிம் குரல்" வாசகனாக இருந்து வருகின்றேன். இரண்டு இதழ்கள் மாத்திரம் எனக்குக் கிட்டவில்லை. தற்போது தொடர்ந்து குரலை சொந்தமாக்கி வருகின்றேன். முஸ்லிம் சமூகத்தின் நலனை மாத்திரமே தன்னகத்தே கொண்டு, முஸ்லிம் குரல் வருவது கண்டு உவகை அடைகின்ற அதே நேரம், குரலின் வளர்ச்சி தொடர்ந்து செல்ல வேண்டும் என இறையையும் பிரார்த்திக்கின்றேன்.

வாரா வாரம் வரும் குரலில், பிரதம ஆசிரியர் அவர்களின் கருத்துக்களைக் கவனிக்கின்ற போது, "இஹ்லாஸ்" என்ற மனத் தூய்மையான பணியே தொடரும், தொடர வேண்டும் என்பதில் உறுதியாக அவர் இருப்பது புலனாகின்றது. இறையுதவி என்றும் உங்களுக்குண்டு.

*எம்.ஐ.ஏ.சுபைர், மீராகேணி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் நாட்டிற்கு எதிரான யுத்தம் நீதியற்றது!! நீதியுலகம் நித்திரை! இறை நீதியை எதிர்பார்க்கிறது ஈராக்!!!

ஈராக் நாட்டிற்கு எதிரான நீதி நியாயமற்ற யுத்தம் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷாலும் பிரிட்டிஸ் பிரதமர் பிளேயராலும் முன்னெடுக்கப்பட்டது உலகம் அறிந்த விடயமாகும். இவ்யுத்தம் ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் உண்டு. அதை அதன் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் மறைத்து வைத்திருக்கிறார். அதைக் களைய வேண்டும் எனும் நோக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது என்று ஆதிக்கத் தரப்பில் சொல்லப்பட்டது.



தற்போது புனித ஈராக் தேசம் அமைதியிழந்து காணப்படுகிறது. எங்கும் அமெரிக்க பிரிட்டிஷ் துருப்புக்களின் அட்டகாசங்கள். அரச அலுவலகங்களும் தனியார் சொத்துக்களும் வங்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகின்றனர். ஈராக்கில் போடப்பட்ட சக்தி வாய் ந்த குண்டுகளாலும் எறியப்பட்ட ஏவுகணைகளாலும் மரணித்தோரின் குடும்பங்கள் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கி நீங்காத துயரத்தில் நீந்துகின்றன. காயமடைந்த பல்லாயிரம் மக்கள் துயரத்தின் எல்லையில் வேதனைக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றர். உணவும் மருந்து வகைகளும் குறைந்து விட்டன. மக்கள் பசியாலும், தாகத்தாலும் வாடுகின்றனர்.

ஈராக் நாட்டின் பக்தாத், பஸறா, கூபா போன்ற நகரங்களில் உள்ள மியூசியங்களில் அரும் பொருட்கள் காட்சிச்சாலைகளில் பல்லாயிரம் வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டு வந்த புராதன தொல் பொருள்களும், சஹாபாக்கள், உமறாக்கள், குலபாக்களின் நினைவுச் சின்னங்களும் விலை மதிக்க முடியாத புராதனச் சொத்துக்களும், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அறிவுக் களஞ்சியங்களும் புராதானச் சின்னங்களும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. குறிப்பாக இஸ்லாமிய வரலாற்றை அழித்து வரும் யஹூதி நஸாராக்களின் ஊடுருவல் நிறைந்து காணப்படுகிறது.

முற்காலத்தில் ஈராக்கில் பல யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. அப்போது பிரிட்டனால் திட்டமிடப்பட்டு அறிவுக் களஞ்சியங்களும், விஞ்ஞான மெய்ஞ்ஞான கண்டுபிடிப்புகளும் நிறைந்திருந்த பக்தாதின் மாபெரும் நூலகம் எரிக்கப்பட்டு அதன் நூல்கள் புறாத், தஜ்லஹ் நதிகளில் கிழித்தெறியப்பட்டன.

அதேபோல் புரதான சின்னங்கள் நிறைந்த உலகின் அழகிய மாநகர் பக்தாத் பொதுவாக ஈராக், சியோனிஸ ஏகாதிபத்தியவாதிகளினால் சிதைக்கப்பட்டு விட்டது. இது இஸ்லாத்தை அழிக்கவேண்டுமென்ற இஸ்லாமிய வல்லரசொன்று உதயமாகக் கூடாதென்ற சியேனிஸ்டுகளின் திட்டமிட்ட சதியேயன்றி வேறல்ல.

திட்டமிட்டு சதிநோக்குடன் புனித ஈராக்கை அழித்து விட்டு தற்போது புனருத்தாரனம் செய்வதற்கு முயல்கின்றனர் சியோனிஸ்டுகள். இதுவும் மற்றுமொறு சதியேயாகும். கட்டிடங்களைக் கட்டியெழுப்பிவிடலாம். குண்டுகளால் கொல்லப்பட்ட மக்களுக்கு இந்த புஷ்ஷால் உயிர் கொடுக்க முடியுமா? திருடப்பட்ட புராதானச் சின்னங்களை இவர்களால் திரும்பப் பெறமுடியுமா?

ஈராக்கில் அழிவைத்தரும் ஆயுதங்கள் உள்ளன. அவற்றைக் களைய வேண்டும். இன்றேல் யுத்தம் செய்தே களைவோம் என்று அமெரிக்கா கூறியது. ஈராக் எம்மிடம் அத்தகு ஆயுதங்கள் இல்லை என்று பலமுறை அறிவித்தும் அதை புஷ் ஏற்கவில்லை. இறுதியில் ஐ.நா. பரிசோதனைக் குழுவையும் அமெரிக்கா அனுப்பியது. அக்குழுவும் அழிவைத்தரும் ஆயுதங்கள் ஈராக்கில் இல்லை என்று அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையையும் உதறித்தள்ளிவிட்டு புஷ் படையெடுத்தான். ஈராக்கை அழித்தான். குண்டுகளைப் பொழிந்தான். மக்களைக் கொன்றான், படைகளை நிறைத்தான். அத்தகு ஆயுதங்களைக் கண்டெடுத்தானா? இல்லை! அப்படியாயின் ஈராக்கை ஆக்கிரமித்த புஷ்ஷின் நோக்கமென்ன? புராதனச் சின்னங்களை அழிப்பதும் விலைமதிப்பற்ற தொல்பொருட்களைத் திருடுவதும் வளங்களைச் சுரண்டுவதும் பெற்றோல் வளத்தை தனதாக்கிக் கொள்வதுமேயாகும் என்பது புத்தி ஜீவிகளுக்கு மறைவானதல்ல! ஆனால் அழிவைத் தரும் ஆயுதங்களைக்களையும் நோக்குடன் புறப்பட்ட புஷ் தற்போது அது ஈராக்கில் காணப்படாதால் கதையைப் பிறிதொரு தலைப்பில் மாற்றினான். அதுவே சதாம் ஒரு கொடுங்கோலன் அவனின் கொடுமையிலிருந்த பிரசைகளைப் பாதுகாப்பேன் என்றான்.



எவ்வித நியாயமுமின்றி ஒரு நாட்டில் அத்து மீறிப் புகுந்து அந்நாட்டின் இறைமமையைக் கெடுப்பதற்கு இந்த புஷ்ஷுக்கு என்ன அதிகாரமிருக்கிறது. இப்போது புரிகிறதல்லவா புஷ்ஷின் நரித்தந்திரம். எண்ணெய் வளத்தை தனதாக்கிக் கொள்ள நினைக்கும் புஷ் அங்குள்ள மலைகளிலும் புறாத், தஜ்லா நதிகளினுள்ளும் இருக்கும் தங்க மலைகளைக் கண்டால் விடுவானா? அங்கேயே குடியேறி விடுவான். ஈராக்கின் நதிகளிலுள்ள மலைகளில் தங்க மலைகள் உள்ளன. அதைக் கைப்பற்றுவதற்காக 98 வீதம் ஈராக்கில் யுத்தங்கள் நடந்த வண்ணமே இருக்கும் என்று ஹிஜ்ரி 1424 க்கு முன்பாக நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் நவின்ற பொன் மொழிகள் ஸஹீஹ் முஸ்லிமில் காணப்படுகின்றன.

ஈராக்கை அண்மியுள்ள முஸ்லிம் நாடுகள் சகோதர நாடான ஈராக்கிற்கு கைகொடுத்துதவத் தவறிவிட்டன. படைகளை ஆதரவாக அனுப்பாவிட்டாலும் போர் வேண்டாமென்று அனைத்து நாடுகளும் ஒருமித்து அமெரிக்காவிடம் வலியுறுத்தியிருந்தால் இப்போரை அமெரிக்கா நடத்தியிருக்காது. பழைய குரோதங்களை மனதில் கொண்ட சில நாடுகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வஞ்சம் தீர்த்து கொண்டன. நாளை அவர்களுக்கும் இந்நிலை உண்டு என்பதை அவர்கள் புரியத் தவறிவிட்டனர். சதாமைப் பயன்படுத்தி இஸ்லாமிய வல்லரசாக அரபுலகில் திகழவேண்டியவர்கள் சதாமுக்கு சதி செய்து சரித்திரத்தை மாற்றி விட்டனர். சதாமுக்குக் கைகொடுத்து அவரைப் பலப்படுத்தியிருந்தால் இன்று ஏதாதிபத்திய வல்லரசுகள் அரபுலகத்திடம் பிச்சை வாங்கியிருக்கும் சதாமைப் போன்ற துணிச்சல் மிகு தலைவன் அரபுலகிற்குக் கிடைத்தது பெரும்பாக்கியம் ஆனால் அதைப் பயன்படுத்த அரபுலகம் தவறி விட்டது.

தற்போது சிரியாவை அமெரிக்கா எச்சரித்து வருகிறது. ஈராக்கினையும் எச்சரிக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அமெரிக்காவின் பின்னால் இஸ்ரேல் நின்று சிரியாவைத் தாக்கும்படி உந்திக் கொண்டேயிருக்கிறது. அமெரிக்கா ருசி கண்ட பூனையாதலால் அது சும்மாயிருக்காது. இன்று உலக மக்கள் மத்தியில் அமெரிக்க புஷ் ஹிட்லரை விடக்கொடியவனாகக் கருதப்படுகிறான்.

இன்று பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொடுமை கூடிக் கொண்டே வருகிறது. நாளுக்கு நாள் பலஸ்தீன மக்கள் துன்பத்தில் சுழன்று கொண்டிருக்கின்றனர். பைத்துல் முகத்திஸை மீட்கும் விடயத்திலும் பஸ்தீன மக்களின் விடுதலைக்காகவும் இது வரை அற்புதத் தலை வர்களில் சதாம் மட்டுமே குரல் கொடுத்து நடவடிக்கையில் ஈடுபட்டார். இன்று சதாம் பின் வாங்கியது இஸ்ரேலுக்கு கொண்டாட்டமாகிவிட்டது. இஸ்ரேலில் நாளுக்கு நாள் அமெரிக்க ஆயுதங்கள் குவிந்து கொண் டிருக்கின்றன. இரசாயன ஆயுதங்களும் உள்ளன. பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலின் அட்டகாசம் தலை விரித்தாடுகிறது. இதைக் கேட்பதற்கு இன்று யாருமில்லை. இஸ்ரேலுடன் போர் தொடுத்து அதன் அட்டகாசத்தை அடக்க எந்த நாடும் முன்வருவதில்லை. இதுதான் நீதியா? இதுதான் நியாயமா?

ஆனால், அல்லாஹ் இருக்கிறான் ஈராக் மீது நடாத்தப்பட்ட அநீதிக்கு மிக விரைவில் நீதி வழங்குவான் என்பது உண்மை. பெரும் வல்லரசனான பிர்அவ்னை கடலில் மூழ்கடித்தும் சர்வாதிகாரியான நிம்றூதை கொசுப் படையால் அழித்தும் கஃபஹ்வைத் தகர்க்க வந்த அப்றஹாவின் யானைப் படையை அபாபீல் பறவைகளை அணு குண்டுடன் அனுப்பி அழித்தொழித்ததும் ஆயுதபலமும் ஆள்பலமும் குன்றியிருந்த பத்ர் களத்தில் மலக்குகளை அனுப்பி காபிர்களைத் தோற்கடித்ததும் இறைவனின் மாபெரும் வல்லமைகளாகும்.

இத்தகு வல்லமைபெற்ற இறைவனுக்கு அமெரிக்காவையும், பிரிட்டனையும் தலைகீழாகத் தூக்கிப் புரட்டுவது அசாத்தியமானதல்ல. இது ஈமானைப் பொறுத்த விடயமாகும். எனவே, அமெரிக்காவின் ஆயுதபலம் மலை போல் இருக்கலாம். ஆனால் ஆன்மீகப் பலம் அதை விடச் சக்தி மிக்கது என்பதை புஷ்ஷும் பியேயரும் புரியும் காலம் தூரத்திலில்லை. இது சத்தியம். என்றோ ஒரு நாள் ஈராக் தனது புனித பூமியிலிருந்து சியோனிஸ ஏகாதிபத்திய வாதிகளை விரட்டியடிக்கும் என்பதில் ஐயமில்லை.

- இப்றாஹீம் நத்வீ -

## அடுத்தது யார்?

பலஸ்தீன்... ஆப்கான்... ஈராக்...
அடுத்தது யார்...?
உன் இரத்த வெறிக்கு
அடுத்த பலி யார்...?


நீ கூறும்
முட்டாள்தனமான பொய்களை
நான் நம்பப் போவதில்லை....
மறுக்காதே...
நீ ஒரு ஏமாற்றுக்காரன்

உனை
நான் எதிர்க்கிறேன் மறுக்கிறேன்
நிராகரிக்கிறேன்...
என் இறுதி தறுவாய் வரை
நான் எதிர்ப்பேன்
உலகிலுள்ள மைகளெல்லாம்
தீரும் வரை நான் எழுதுவேன்...
என் அடித் தொண்டை
செத்துப் போகும்வரை
நான் சத்தமிட்டுச் சொல்வேன்...
நீ ஒரு பொய்யன்.

மேய்ப்பாளன் வேடமிட
உனக்கு அனுமதி தந்தது யார்...?
ஈராக் எண்ணெயின் தேசம்...
சத்தியமிடுகிறேன்...
அதுதான் உன் இலட்சியம்

ஈராக்கை விழுங்கியவனே...
எங்கே நீ சொன்ன
நாசகார ஆயுதங்கள்...
இஸ்ரேலிடமும்
வடகொரியாவிடமும் இல்லாததா

உன் பச்சோந்தித்தனம் நாம் அறியாததல்ல...
ஏய்.. குள்ள நரியே...
உன்னை நம்ப
நாம் கோமாளிகளுமல்ல
உன் வெறிக்கு
அடுத்த பலி யார்...?



யாராயிருந்தால் என்ன?
நான் நிசப்திக்கும் வரை
சப்தமிடுவன்.... உனை எதிர்த்து...
எம் போராளிகளுடன் கைகோர்த்து
உனை எதிர்ப்பேன்... நீ சமாதியாகும் வரை....

*மூலம் : மயிஹம்தி அலி டெஸாகி*
*தமிழில் : ஷெறோன் பின்த் ஹமீட்*

சுவடு - 09
முஸ்லிம் குரல்
Muslim Kural
25 ஏப்ரல் 2003 08 - ஸபர் - 1424

Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

## நமது மக்களுக்கு உதவுவோம்!

மூதூர் பிரதேசத்தில் நமது மக்கள் மீது நடாத்தப்பட்ட ஆதிக்க அடாவடித்தனத்தால் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது வீடு வாசல்களை இழந்து; அகதிகளாக பாடசாலைகளிலும் பள்ளிவாசல்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவ் அவல வாழ்விற்கு தள்ளப்பட்ட நமது சகோதர சகோதரிகளுக்கு பல்வேறு வழிகளிலும் உதவுவது நமது அனைவர் மீதும் கடமையாகிறது.

இலங்கை அரசியல் சூழலில் முஸ்லிம்கள் மீது தொடரும் நெருக்கடியானது எப்பகுதியிலும் எந்நேரத்திலும் நம்மையும் இப்படியான அவல வாழ்விற்குள் தள்ளிவிடக் கூடிய ஆபத்தான நெருக்குதலைக் கொண்டுள்ளதை நாமறிவோம்! தென்னிலங்கை தொடக்கம் வடக்கு கிழக்கு வரை இதுவே நிலவிவரும் யதார்த்தமான சூழ்நிலையுமாகும்.

தங்கள் தாயகமான வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் துரத்தியடிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும்; இன்னும் அந்த மக்களின் வாழ்வில் நமபிக்கை ஒளிக்கீற்று தென்படவில்லை. இந்நிலையில் மீளவும் ஒரு தொகுதி அகதி மக்கள், இன்றைய சமாதானப் பேச்சுக்காலத்திலும் நமது சமூகத்திற்குள் உருவாக்கப்பட்டு விட்டனர். மாவனல்ல, மாளிகாவத்தை இன்றைய மூதூர் வரையும் இலங்கை பாதுகாப்புப் படையால் நமது மக்களை காப்பாற்ற முடியவில்லை; முன்னைய இரண்டு இடங்களிலும் நமது மக்கள் மீது ஏகிறிப் பாய்ந்த சிங்கள இனவாதத்திற்கு பாதுகாப்பு படையினரே உதவியாகவும் பின்புலமாகவும் செயற்பட்டனர். மூதூர்ப்பிரதேச சம்பவத்தின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட முடியாது கைகட்டி பாதுகாப்புபடையினர் நின்றனர். இந்நிலையில் நமது மக்களை பாதுகாப்பதற்கான அரசியல் உத்தரவாதத்தை யாரிடம் பெறுவது என்பது உடனடியாக எழுப்பப்பட வேண்டிய பிரதான கேள்வியாக உள்ளது.

முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்குக்கும், அடக்குமுறைக்கும் கண்காணிப்புக்குழு தொடர்ந்தும் துணை பேகின்றது; நடைபெற்ற சம்பவங்களை நியாயமாக பரிசீலித்து நீதி வழங்குவதில் கண்காணிப்புக் குழு முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்து வருகிறது. வாழைச்சேனை தொடக்கம் மூதூர்ப் பிரதேசம் வரை இதற்கு தக்க சாட்சியாகவுள்ளது. கண்காணிப்புக் குழுவை முஸ்லிம் மக்கள் உடனடியாக இந்த நாட்டை விட்டு வெளியேறுமாறு கோர வேண்டியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி மூதூர் பிரதேச மஜ்லிஸ் அல்சூறா அமைப்புக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒரு பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு உடன்பாடுகள் கண்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இவ் உடன்பாடுகளை ஒரு தலைப்பட்சமாக தொடர்ந்தும் மீறுபவர்கள் யார் என்பது முஸ்லிம்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாக உள்ளது. விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான முரண்பாடுகளை தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளாகவும் மோதலாகவும் மாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளை நாம் கண்டோம்! இந்த அரசியல் சூழ்ச்சிக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருபோதும் பலியாகிவிடக் கூடாது!

*தோழமையுடன்,*
*பிரதம ஆசிரியர்.*

இன்ஷா அல்லாஹ்!
10வது இதழிலிருந்து...
பல்வர்ணத்துடன்
அதிக பக்கங்களுடன்
உங்கள் கரங்களில்!
சீரியஸான அரசியல் கட்டுரைகள்!
வாசகர்களை அசத்தும்
சமூக, பொருளாதார,
பண்பாட்டு விமர்சனங்கள்,
மாணவர் பகுதி -
பெண்கள் சிறப்புப் பகுதி
ஸ்லட் ரீடிங்' —ஹர் உலாக்கள்,
சிறுகதை, கவிதைகள்,
உலக நடப்புகள்.
வித்தியாசமான வடிவமைப்பில்
படிக்கத் தூண்டும் பத்திரிகையாக
நமது முஸ்லிம் குரல்!
எழுதுங்கள்! வாசியுங்கள்!!
சவால்களை எதிர்கொள்வோம்
நம்மை தயார்படுத்தி....

எதிர்வரும் மே மாதம்
9ம் திகதி நமது
பத்திரிகை வெளிவரும்

## உங்களுக்கு....

+ மூதூர் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல்களின் தலையீட்டினால், ஓரளவு தடுக்கப்பட்டது. அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. காத்தான்குடியிலும் ஓரளவு ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. ஹர்த்தால் விடயம் தெரிந்தவுடன் கல்முனையில் கடைகள் அடைக்கப்பட்டு ஹர்த்தால் நடைபெற்றால் கல்முனை முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களை தாக்கி சூறையாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றதாம். இதற்கு பாண்டிருப்பில் கூட்டமொன்றும் நடந்துள்ளது.

+ மூதூரில் உடனடியாக கூட்டப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதியுயர் பீடம் கூட்டத்தில் அரசாங்கத்திற்கு வழங்கு ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டுமென்ற கருத்து பரவலாக வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. கலந்து கொண்ட எம்.பிக்களில் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் இந்த நிலைப்பாட்டை அதிகம் வலியுறுத்தியுள்ளனர். ஆனால், ஹக்கீமும் ஹசன் அலியும் இதனை வன்மையாக எதிர்த்து கூட்டம் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திணறிக் கொண்டிருந்த நேரம்தான், இக்கூட்டம் நடந்த இடத்திற்கு சிலர் மீற்றருக்கு அப்பால்தான் புலிகள் வந்து வீடுகளைத் தீக்கரையாக்கி மீன் பிடி படகுகளை எரித்துள்ளனர். இதனால் கூட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையாம்!

+ மூதூரில் இருந்து கொண்டு ஹரீஸ் எம்.பி ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டுதான் மூதூருக்கு இராணுவத்தை வரவழைத்தாராம்! ஹக்கீம் பிரதம மந்திரியுடனோ, பாதுகாப்பு அமைச்சருடனோ தொடர்பு கொண்ட போதும் அவர்கள் முயற்சி எடுக்கவில்லையாம். ஆனால் ஜனாதிபதியின் தரப்பு ஹரீஸ் எம்பியை பலமுறை தொடர்பு கொண்ட வண்ணமிருந்ததாம். இதனை அங்கு நின்றவர்களும் அறிந்திருக்கிறார்கள். உடனடியாக முதலில் ஹக்கீமினதும் ஹரீஸ் எம்.பியினதும் பாதுகாப்புக்கு அங்கிருந்த இராணும் அனுப்பி வைக்கப்பட்டதாம். பின்னர் பெருமளவில் இராணுவம் மூதூர் பிரதேசத்திற்கு வெளியிடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாம் ஹரீஸ் எம்பிக்கும் ஜனாதிபதிக்குமான நெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதை இது காட்டுகிறது.

+ 58, 59 ஆம் கொலனிகளான ஆஸாத் நகர், ஜின்னா நகர் போன்ற பிரதேசங்கள் முற்றாக இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளதாம். பெண்கள் அணிந்திருந்த சிறு சிறு நகைகள் கூட யாழ்ப்பாண பாணியில் கழற்றி எடுக்கப்பட்டதாம். "சுதந்திரப் பறவைகள்" என்ற விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் இதற்கு விஷேடமாகக் கொண்டு வரப்பட்டனராம். கிணறுகளுக்குள் கூட மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் [illegible] இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org